பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 17 திங்கட்கிழமை (31-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:125

## கடந்த பதினொரு நாள்களில்

# 6,000 குண்டுகள் 700 ஏவுகணைகள் தாக்கியும் ஈராக் அசையவில்லை!

## எதிர்ப்பு அலையால் கூட்டுப்படைகள் திண்டாட்டம்

கடந்த 11 நாள்களாக நடந்து வரும் போரில் தலைநகர் பக்தாத் உட்பட பல்வேறு நகரங்கள் மீதும் அமெரிக்கக் கூட்டுப்படைகள் 6 ஆயிரம் குண்டுகளைப் பொழிந்தும் 700 ஏவுகணைகளைச் செலுத்தியும் தாக்குதல் நடத்தியும்கூட ஈராக்கை அசைக்க முடியவில்லை. ஈராக்கியப் போர் வீரர்களின் ஆவேச எதிர்த் தாக்குதலால் கூட்டுப்படைகளின் தரைப் பிரிவினர் திணறுகின்றனர். அவர்கள் விட்டுவிட்டு நத்தை வேகத்திலேயே நகர்கின்றனர். புழுதிப்புயலும் அவர்களுக்குப் பாதகமாக இருக்கின்றது.

ஈராக் மீதான தரைப் படைகளின் தாக்குதல்களை நான்குமுதல் 6 நாள்களுக்கு நிறுத்திவைத்திருப்பதாக நேற்றுமுன்தினம் அமெரிக்கா திடீரென அறிவித்தது. இதனால், அமெரிக்க வீரர்கள் தாம் நிலைகொண்ட பகுதிகளிலேயே நத்தை வேகத்தில் நகர்ந்து பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகின்றனர். இதேவேளை - பக்தாத்தின் மீதான விமான, ஏவுகணைத் தாக்குதல்களை அமெரிக்கா தொடர்ந்து நடத்தி வருகின்றது.

நேற்றுமுன்தினமிரவும் நேற்றுக் காலையும் கடுமையான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இத் தாக்குதல்களில் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைனின் இளையமகன் ஹூசைனின் மாளிகையும் தகர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. பக்தாத்தைப் பாதுகாக்கும் குடியரசுக் காவல் படையினர் மீதும் குண்டுகள் விழுந்துள்ளன.

ஈராக் மீதான அமெரிக்காவின் போர் நேற்று 11ஆவது நாளாக நீடித்தது. ஈராக் படையினர் காட்டிவரும் பலத்த எதிர்ப்பு, அமெரிக்கப் படையினருக்கு குவைத்திலிருந்து தரை வழியாக அனுப்பப்படும் உணவுப் பொருள்களை ஈராக் வீரர்கள் தடுப்பது ஆகிய காரணங்களால் தரைப் போரை ஆறு நாள்களுக்கு நிறுத்திவைக்க அமெரிக்கா நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை அடுத்து தரைப் போர் நிறுத்தப்பட்டது. ஆயினும், பக்தாத் மீது போர் விமானங்களின் தாக்குதல்களும் ஏவுகணைத் தாக்குதல்களும் தொடர்ந்து நடத்தப்பட்டன. நேற்றுமுன்தினம் மட்டும் அமெரிக்கப் போர் விமானங்கள் ஆயிரத்துக்குக் கூடுதலான தடவைகள் பக்தாத்மீது பறந்து குண்டுகளைப் பொழிந்தன.

நேற்றும் பக்தாத்மீது பயங்கரச் சத்தத்துடன் குண்டுகள் விழுந்து வெடித்தன. மொசுல், பஸ்ரா நகரங்கள் மீதும் குண்டுத் தாக்குதல்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதல் நடத்த 4,000 அரேபியர்கள் தயார்!

பக்தாத்,மார்ச்31

கூட்டணிப் படைகளுக்கு எதிராக தற்கொலைத் தாக்குதல்களை நடத்த நாலாயிரத்துக்கும் அதிகமான வெளிநாட்டு அரேபியர்கள் தயாராக உள்ளனர் என்று ஈராக் தெரிவித்திருக்கிறது.

போர் மேலும் தொடருமாயின் தற்கொலைத் தாக்குதல்கள் தீவிரமடையும் என்று ஈராக்கிய இராணுவ அதிகாரி ஜெனரல் ஹசெம் அல் ராவி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"நாங்கள் ஆண்டவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள். அதற்காகப் போராடுபவர்கள். புனிதப் போர் அவசியமான ஒன்று. அது கடவுளால எமக்கு தரப்பட்டுள்ளது." - என்று அவர் தெரிவித்தார்.

உலகெங்கும் இருந்து வந்த 4 ஆயிரம் அரேபியர்கள் அமெரிக்கப் படைகளை எதிர்த்து தற்கொலைத் தாக்குதல்களை நடத்த ஆயத்தமாக உள்ளனர். தற்கொலைத் தாக்குதல்கள் எமது இராணுவத் திட்டத்தின் ஒரு பகுதி - என்றும் ஈராக் உதவி அதிபர் தெரிவித்தார். (ஐ)

## புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானபின் 16 போராளிகள் பலி; 30 போராளிகள் கைது!

### புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

திருகோணமலை,மார்ச்31

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் 16 போராளிகளை நாம் இழந்துள்ளோம்; 30 போராளிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எமது கட்டுப்பாட்டிலுள்ள மாவட்டங்களிலேயே இவை அதிகமாக நடைபெறுகின்றன. - இவ்வாறு திருமலை மாவட்ட புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தெரிவித்தார்.

புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறையின் அனுசரணையுடன் மூதூர் கிழக்கு சாம்பூர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புலிகளின் மாவட்ட கட்டளையிடும் தளபதி கேணல் பதுமன், திருமலை மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் தேவன் மற்றும் எம்பிக்களான இரா.சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு திலக் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

கடந்த ஒருவருட காலமாக நாம் சமாதானத்தை அனுபவித்து வருகின்றோம். இந்தச் சமாதானம் நிலையானதா எனச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கவேண்டும். எமது தலைவரினால் கைத்துப்பாக்கி ஒன்றுடன் ஆரம்பிக்கப்பட போராட்டம் இன்று பொலீஸ் நிலையங்கள், படைமுகாம்கள், ஓயாத அலைகள் எனப்பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. படைகளுக்கு நாம் பாரிய இழப்புகளை ஏற்படுத்தியுள்ளோம். அரசு பல நெருக்கடிகளுக்கு உள்ளாகியது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஒறுகொடவத்த மர்ம வீட்டிலிருந்த பல தடயப் பொருள்கள் எரிப்பு?

கொழும்பு,மார்ச்31

சர்ச்சைக்குரிய ஒறுகொடவத்தை மர்மவீட்டில் சட்டவிரோத சம்பவங்கள இடம்பெற்றதற்குச் சாட்சியாக அங்கிருந்த பல தடயப் பொருள்கள தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது.

அந்த வீட்டில் சிறுமி ஒருவரை நாய்ச் சங்கிலியால் கட்டி வைத்திருந்தார் எனக் கூறப்படும் பெண்ணின் ஆதரவாளர்கள் அந்த வீடு பொதுமக்களால் முற்றுகையிடப்பட்டுத் தாக்கப்பட்ட போது மக்களோடு மக்களாகச் சென்று - மேற்படி தடயப் பொருள்களைத் தீயிட்டுக் கொளுத்தியிருக்கிறார்கள். இதற்குப் பொலீஸார் சிலரும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்று இரகசியப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

இதேவேளை, சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்ணிடமிருந்து எவ்வித உண்மைகளையும் பொலீ

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை ஆதரித்து பேசியது பயங்கரவாதச் செயல் அல்ல!

### திருத்திய புதிய மனுவை மத்திய அரசு தாக்கல் செய்யும்



புதுடில்லி,மார்ச்31

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக ம.தி.மு.க. தலைவர் வைகோ மீது 'பொடா' சட்டத்தின் கீழ் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை சரியே, என்று உச்சநீதிமன்றத்தில் சனிக்கிழமை மனுதாக்கல் செய்த மத்திய அரசு, அது தவறான விளக்கம் எனவும் புதிய விளக்கத்தை திங்கட்கிழமை தாக்கல் செய்யப்போவதாகவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

மத்திய அரசு அளித்த கட்டளைக்கு மாறாக, சனிக்கிழமை மனுத்தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்று சட்டத் துறை மூத்த அதிகாரி டில்லியில் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். திருத்தப்பட்ட புதிய மனு, திங்கட்கிழமை தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'பொடா' சட்டத்தின்படி குற்றமாகக் கருதப்படும் அளவுக்கு பொதுக் கூட்டத்தில் வைகோ எதுவும் பேசவில்லை என்று புதிய மனுவில் தெரிவிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு அளித்த கட்டளைக்கு ஏற்ப மனு தாக்கல் செய்யப்படவில்லை என்பதை உணர்ந்தவுட

(14ஆம் பக்கம் பார்க்க)

## தென்கிழக்கு ஆசியாவில்

# தீவிரமாகப் பரவிவரும் திகில் நோய் மருந்தே இல்லை; மரணம் நிச்சயம்

### கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுகாதார எச்சரிக்கை

கொழும்பு,மார்ச்31


தென்கிழக்கு ஆசியாவில் பரவிவரும் பயங்கரமான நோயாகக் கருதப்படும் நியூமோனியா ரகக் காய்ச்சல் தொடர்பாக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அதிகாரிகள் சுகாதார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் விசேட பணிப்பின் பேரில் அரசு, தனியார் வைத்தியசாலைகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. இந்தக் காய்ச்சலால் இலங்கையில் இதுவரை எவரும் பாதிக்கப்படவில்லை.

சுமார் 100.4 பாகை பரனைட் வெப்பத்தில் காய்ச்சல், வரட்டு இருமல், திணறித்திணறி மூச்செடுப்பு, தலைவலி, தசைகளில் இறுக்கம், பசியின்மை, மனக்குழப்பம், தோல் அரிப்பு, வயிற்றோட்டம் ஆகிய அறிகுறிகள் இந்த நோய்க்குக் காணப்படும்.

சீனாவிலிருந்து பரவிய இந்த நோயால் இதுவரை 55 பேரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுவிட்டன. நியூமோனியாக் காய்ச்சலுக்குக் காரணமான கிருமியின் மூலமே இந்த மர்மக் காய்ச்சலும் பரவுவதாக இந்த நோய் தொடர்பான பூர்வாங்கப் பரிசோதனைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் பிரகாரம் இந்தப் புதிய நோயின் பெயர் 'சார்ஸ்' (SARS) எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)




இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

குடாநாட்டில் விரைவில்

# நவீன வசதிகளுடன் கூடிய புற்றுநோய் வைத்தியசாலை

## நிறுவ அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சி

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்ப்பாணம் குடாநாட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கு உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் நிதி திரட்டும் நடவடிக்கை ஒன்றினை யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் முன்னெடுக்கவிருக்கின்றது.

இது தொடர்பாக விளக்கமளிப்பதற்கான செய்தியாளர் மாநாடு ஒன்று நேற்றுக் காலை இணையப் பணிமனையில் நடைபெற்றது.

இணையத்தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா மற்றும் வைத்திய கலாநிதி குணாளன் ஆகியோர் இது தொடர்பாக விளக்கமளித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் கூறும்போது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளின் முதற்கட்டமாக யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழகம் என்பன நவீனமயப்படுத்தப்படவேண்டும்.

அத்துடன், இங்கு ஒரு புற்றுநோய் வைத்தியசாலையை நிறுவ வேண்டியதும் முக்கியமான தேவையாகவுள்ளது.

எனவே, இவற்றில் முதற்கட்டமாக புற்றுநோய் வைத்தியசாலையை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு சர்வதேச நாடுகளிலிருந்தும் வெளிநாடுகளில் வசிக்கும் எம்மவர்களிடமிருந்தும் நிதி உதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

இந்த நிதி சேகரிப்புக்கு அரசாங்கத்திடம் இருந்தும் விடுதலைப் புலிகளிடம் இருந்தும் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே விரைவில் நிதி சேகரிப்பு நடவடிக்கை ஆரம்பமாகும்.

அத்துடன், இந்த புற்று நோய் வைத்தியசாலையை எங்கு நிறுவுவது - எப்படியான திட்டவரைவுகளை உருவாக்குவது போன்ற விடயங்களை ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று விரைவில் நடத்தப்படும்.

இக்கலந்துரையாடல் எப்பொழுது, எங்கு நடைபெறும் என்பன போன்ற விடயங்கள் பத்திரிகைகள் ஊடாக பின்னர் தெரியப்படுத்தப்படும்.

இதனை அமைப்பதற்கு உகந்த பூரண வசதிகளுடன் கூடிய இடத்தினையும், அது குறித்த நிதித்திட்ட வரைபினையும் தமது அபிப்பிராயப்படி தெரிவிக்க விரும்புபவர்கள் மேற்படி கலந்துரையாடலில் சமுகமளித்து அதனைத் தெரியப்படுத்தலாம் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-4)



சமஷ்டி குறித்து அறிந்துகொள்வதற்காக விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழு நேற்றுமுன்தினம் பயணமானது. புறப்படுவதற்கு முன்னர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குழுவினர் எடுத்துக்கொண்ட படம் இது. இந்தக் குழுவில் சீ.பிரபாகரன், ந.சுதன், ஜெ.திவாகர், மீ.சிவபாலன், கி.ஜெயப்பிரகாஷ், க.ராஜ்கண்ணா, க.சுரேந்திரன், பே.சிவபரன், சீ.பரமேஸ்வரன், இரா.ஜீவநந்தன், க.பிரகலாதன், சோ.லோகரஞ்சினி, பி.ரேவதி, கா.சுபைதா, சீ.மோகனா, சீ.சிறிதேவி, க.வினோதினி (லண்டன்), சோ.டேவிட்அன்ரன் தவராஜ் (சுவிஸ்), நே.குணரத்னம் (கனடா), பாஸ்கரன் (நோர்வே) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

# 16 விடுதலைப் புலிகள் வெளிநாடு பயணமாகினர்

வெளிநாடுகளிலுள்ள சமஷ்டி ஆட்சிமுறைகள் குறித்து அறிந்துகொள்வதற்காக விடுதலைப் புலி உறுப்பினர்கள் 16 பேர் நேற்றுக் கட்டுநாயக்க விமான நிலையம் வழியே பயணமானார்கள்.

நேற்று அதிகாலை 230 மணியளவில் புறப்பட்ட விமானத்தில் அவர்கள் பயணம் மேற்கொண்டனர். பின்லாந்து, ஜேர்மனி, நோர்வே ஆகிய நாடுகளுக்கு அவர்கள் விஜயஞ்செய்வர். இரு வாரங்களில் அக்குழுவினர் நாடு திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாடுகளிலுள்ள ஐந்து புத்திஜீவிகளும் இக்குழுவினருடன் இணைந்துகொள்வர். (ஒ)

வழங்கிய தகவல்கள் பல பொய்யானவை

# பாதுகாப்புப்படை உளவுப் பிரிவுகளை புனரமைக்க பிரதமர் ரணில் தீர்மானம்

கொழும்பு,மார்ச்31

பாதுகாப்புப் படைகளிலுள்ள உளவுப் பிரிவுகள் அனைத்தையும் உடனடியாகப் புனரமைப்பதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருக்கிறார். இதையடுத்து, புனரமைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சரையும் உள்துறை அமைச்சரையும் பிரதமர் பணித்திருக்கிறார். இந்த உளவுப் பிரிவுகளினால் கடந்த காலங்களில் அரசுக்கு வழங்கப்பட்ட தகவல்களில் பெரும்பாலானவை பொய்யானவை எனத் தெரியவந்திருப்பதை அடுத்தே, அவற்றைப் புனரமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோர் அண்மையில் கிழக்கு மாகாணத்துக்குச் செல்ல ஆயத்தமான போது, அவர்களைக் கொல்ல விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருக்கின்றனர் எனத் தகவல் கிடைத்திருப்பதாக உளவுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர். இந்த எச்சரிக்கை குறித்து பிரதமருக்கு அறிவிக்கப்பட்டதும் இத்தகவல் குறித்து வேறு வழிகளில் ஆராய்ந்து பார்க்கப்பட்டபோது அதில் உண்மையில்லை எனத் தெரியவந்திருக்கிறது. (ஒ)

# அமைச்சர்கள், அரசு எம்.பிக்களின் மேலதிக பாதுகாப்பை நீக்க முடிவு!

உயிருக்கு அச்சுறுத்தல் இல்லாத சகல அமைச்சர்களினதும் அரச எம்.பிக்களினதும் மேலதிகப் பாதுகாப்பை நீக்குவதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

இதனைவிட அச்சுறுத்தல்கள் இல்லாத அமைச்சர்கள் பாதுகாப்பு வாகனங்கள் அணியுடன் செல்லும் சம்பிரதாயத்தை உடனடியாக நிறுத்துவதற்கும் பிரதமர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

அமைச்சர்கள் பங்குபற்றும் பொது வைபவங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றுக்குப் பாதுகாப்புப் படையினரை பட்டாளமாக அழைத்துச் செல்வதையும் தடுக்க பிரதமர் நடவடிக்கை எடுக்கவிருக்கிறார் எனவும் அறியப்படுகிறது.

# அரசுக்கா, எதிர்க்கட்சிக்கா செல்வாக்கு? அறிய ஜனாதிபதி அதீத ஆர்வம்

கொழும்பு,மார்ச்31

அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் நாட்டு மக்களிடையே உள்ள செல்வாக்கை கண்டறிய ஜனாதிபதி விரும்பியிருக்கிறார் என அறியப்படுகிறது. இதற்கான மதிப்பீட்டை நடத்தி விரைவில் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு தனது அரசியல் ஆலோசகர்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார் எனவும் கூறப்படுகிறது. அரசின் சமாதான முயற்சி குறித்து மக்களின் கருத்தென்ன?, சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் மாற்றப்படவேண்டுமா? ஆகியவை குறித்தே முக்கியமாக இந்த மதிப்பீட்டில் ஆராயப்படவிருக்கின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய வேட்பாளர் குறித்தும் மதிப்பீடு நடத்தப்படவிருக்கின்றது. பிரதமர் ரணில், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அநுர பண்டார நாயக்க, கருஜயசூரிய, விமல் வீரவன்ஸ ஆகியோர் இந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுவர்.

இந்த மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே எதிர்காலத்தில் ஜனாதிபதி முக்கிய அரசியல் தீர்மானங்களை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

நிரந்தர நியமனம் வழங்கக்கோரி

# சுகாதாரத்தொண்டர்கள் புதன் முதல் தொடர்ச்சியாக மறியற்போரில் குதிப்பர்

யாழ்ப்பாணம்,மார்ச்31

குடாநாட்டில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றுவோர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் எனக் கோரி நாளைமறுதினம் புதன் கிழமை முதல் யாழ்.நகரில் உள்ள மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் முன்பாக காலவரையறையற்ற மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்த மறியற்போராட்டம் காரணமாக சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணிமனையின் நாளாந்தப் பணிகள் முடங்கும் எனக் கூறப்பட்டது.

மேற்படி மறியற்போராட்டம் பற்றி சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றிவரும் நாங்கள், காலத்தின் தேவைகருதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாகத் தொண்டர் சேவையை நிறைவேற்றி வருகின்றோம்.

நிரந்தர நியமனம் வழங்கக்கோரி கடந்த வருடம் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு பல தடவைகள் அறிவித்தும் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

எமது இந்த நிலைமையை விளக்கி கடந்த ஜனவரி மாதம் மீண்டும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்தோம். அதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதனையடுத்தே நாளைமறுதினம் முதல் சாதகமான முடிவுகிடைக்கும்வரை மறியற்போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-5)

# கூட்டுறவுச் சங்க சமாசத்துக்கு புதிய இயக்குநர் சபை தெரிவு

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய இயக்குநர் சபை நேற்றுத் தெரிவுசெய்யப்பட்டது.

புதிய இயக்குநர் சபையைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலில் இரு அணிகளுக்கிடையே கடும் போட்டி நிலவியது.

சமாசத்தின் தற்போதைய தலைவர் சி.வ.கே.சிவஞானம் தலைமையிலான அணி மீண்டும் சமாசத்தின் நிர்வாகத்தைக் கைப்பற்றியது.

விவசாய, நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு புதிய சபையைத் தெரிவு செய்வதற்காக வாக்களித்தனர்.

சி.வீ.கே.சிவஞானம் (யாழ். ப.நோ.கூ.சங்கம்), சி.குமாரவேல் (சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்), மா.செல்வராசா (மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்), கு.கந்தசாமி (அளவெட்டி ப.நோ.கூ.சங்கம்) ஆகியோர் அடங்கிய புதிய இயக்குநர் சபை நேற்று தெரிவு செய்யப்பட்டது.

இவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட அணியில், வி.கனகலிங்கம் (புங்குடுதீவு கூ.சங்கம்), சி.சிவமகாராசா (தெல்லிப்பழை கூ.சங்கம்), மா.சுப்பிரமணியம் (சங்கானை கூ.சங்கம்) ஆகியோர் தெரிவாகினர்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் இயக்குநர் சபை அடுத்த மூன்று ஆண்டுகள் பதவியில் இருக்கும். (ஐ-17)

# பொ.ஐ.முன்னணியுடனான ஒப்பந்தம் குறித்து ஜே.வி.பி. இளைஞர்கள் மத்தியில் அதிருப்தி

## விவரங்கள் தெரிவிக்கப்படுவதில்லை என குற்றச்சாட்டு

ஜே.வி.பி. தலைவர் ஒருவரின் அண்மைக்கால செயற்பாடுகளுக்குக் கட்சிக்குள் வன்மையான கண்டனம் எழுந்திருப்பதாகத் தெரிகிறது. இதனால், தீவிரவாத இளைஞர்கள் குழு ஒன்று பிரிந்து செல்லக் கூடிய சந்தர்ப்பமும் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் செய்து கொள்ளவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாகவே இளைஞர்கள் மத்தியில் அதிருப்தி தோன்றியிருப்பதாக அறியப்படுகிறது.

ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வாவும், பிரசார செயலாளர் விமல் வீரவன்சவும், ஜனாதிபதியுடனும் பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்களுடனும் நடத்தும் பேச்சுக்களின் விவரங்கள் கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் எழுப்பப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜே.வி.பி. அதியுயர் மட்ட உறுப்பினர்கள் கூட்டத்திலேயே இக்குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக ஜே.வி.பியின் நகல் திட்டம் பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அது தொடர்பான ஜனாதிபதியின் அபிப்பிராயம் இன்னமும் தெரிவிக்கப்படவில்லை.

பேச்சுக்களில் கலந்துகொண்ட ஜே.வி.பி. தலைவர்கள் கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். ஆனால், அந்த நகல் திட்டம் ஜனாதிபதியின் கைக்கே கிட்டவில்லை என்று நம்பத்தகுந்த செய்திகள் தெரிவிக்கின்றன. எமது யோசனைகளை ஜனாதிபதி சட்டை செய்யவில்லை. வெளிநாடுகளில் சுதந்திரக் கட்சிக் கிளைகளைப் புனரமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்று ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் கூறினார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் ஜே.வி.பியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வதை, வெளிப்படையாகவே கண்டித்து வருகின்றன. இப்படியான நிலையில் ஆட்சியைக் கவிழ்ப்பதுதான் ஒரே நோக்கம் என்றால் நாம் காலங்காலமாகக் கடைப்பிடித்து வந்த கொள்கைகளைக் கைவிடவேண்டுமா என்று இளைஞர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஒ)

# வாகனேரியில் முஸ்லிம் மக்கள் மீண்டும் விவசாயம் செய்யலாம்

## புலிகளுடனான பேச்சில் இணக்கம்

மட்டக்களப்பு,மார்ச்31

"பேரினவாத சிங்கள அரசு தமிழ் மக்களை ஒடுக்கியது. ஆனால், எக்காரணம் கொண்டும் புலிகள் முஸ்லிம் மக்களை ஒடுக்கமாட்டார்கள். அவ்வாறு செய்தால் இவ்வளவு காலமும் போராடியதில் அர்த்தமில்லாமல் போய்விடும்" என்று புலிகளின் மட்டு. மாவட்ட விசேட தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

வாகனேரி பாடசாலையில் நடைபெற்ற புலிகளின் பிரதிநிதிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின் போதே ரமேஷ் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இச்சந்திப்பில் புலிகளின் சார்பில் மட்டு.அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், பிரதேசப் பொறுப்பாளர் தோத்திரன், விநோதன் படையணித் தளபதி தாத்தா ஆகியோரும் முஸ்லிம் மக்கள் சார்பில் பஷீர் சேகுதாவூத் எம்.பி தலைமையிலான குழுவினரும் கலந்துகொண்டனர்.

வாகனேரியிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நேற்று முதல் முஸ்லிம்கள் தங்களது காணியில் நெற்செய்கையில் ஈடுபடலாம் என இணக்கம் காணப்பட்டது.

தளபதி ரமேஷ் தொடர்ந்து பேசுகையில், முஸ்லிம் மக்கள் எமது போராட்டத்தில் பங்கெடுத்துள்ளனர். முஸ்லிம் இளைஞர்கள் பலர் மாவீரர்களாகவும் உள்ளனர். கடந்தகால கசப்புணர்வுகளை நாம் மறந்துவிடுவோம். முஸ்லிம்கள் விட்டுச் சென்ற வயல்களை நாம் எடுத்துக்கொள்ளவில்லை.

அவ்வயல்களில் மீண்டும் செய்கை பண்ண சில தவிர்க்க முடியாத காரணங்களினால் முஸ்லிம்களுக்கு வர முடியாமல் போனது.

- இவ்வாறு அவர் சொன்னார்.

## ஈராக் போரின் பதினொராவது நாள்:

# தரைவழித் தாக்குதலை நிறுத்திவிட்டு குண்டுவீச்சில் அமெரிக்கா மும்முரம்!

## இதனால் பொதுமக்கள் உயிரிழப்பு அதிகரிக்கும் என அச்சம்

லண்டன்,மார்ச்31

ஈராக்கில் தரைப்படைத் தாக்குதலை 6 நாள்களுக்கு நிறுத்தியுள்ள அமெரிக்கா, வான் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

போர் ஆரம்பித்த 11 ஆவது நாளான நேற்று அதிகாலை அமெரிக்க விமானங்கள் வீசிய 10 சக்திவாய்ந்த குண்டுகள் ஒரே நேரத்தில் வெடித்ததில் பக்தாத் நகரமே அதிர்ந்தது.

பகதாத்தின் வடமேற்கில் இதேபோல் 30 குண்டுகள் நேற்றுக் காலை வீசப்பட்டன.



பக்தாத் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை அமெரிக்கா தீவிரப்படுத்தியுள்ள நிலையில் ஈராக்கும் தனது பீரங்கித் தாக்குதலை அதிகரித்துள்ளது. விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் அமெரிக்க விமானங்களை நோக்கி ஈராக் எதிர்த்தாக்குதல் நடத்தியது.

இதுவரை இல்லாத அளவுக்கு நேற்று அமெரிக்க விமானங்கள் அணி அணியாகப் பக்தாத்தின் மையப் பகுதியையும், புறநகர்ப் பகுதியையும் குறிவைத்துத் தாக்கின.

இரவு பகலாக நடந்த தாக்குதலில் 1000 இற்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன. ஏவுகணைகளும் சரமாரியாகப் பாய்ந்து ஈராக்கின் இலக்குகளைத் தகர்த்தன.

இந்த இடைவிடாத தாக்குதலால் பக்தாத நகரம் முழுவதும் கடும் புகை மண்டலத்தில் மூழ்கியது.

நேற்றுப் பகலில் நடந்த தாக்குதலில் அமெரிக்க விமானங்கள் சக்திவாய்ந்த அதிபயங்கர லேசர் குண்டுகளை வீசின. இவை ஒவ்வொன்றும் 1000 கிலோ எடை உள்ளவை.

குறி தவறாமல் இந்தக் குண்டுகள் பக்தாத நகரில் ஈராக்கின் இராணுவ நிலைகளைத் தகர்த்தன. பக்தாத்தில் தெற்குப் பகுதியில் உள்ள பதுங்கு குழியும் தகர்க்கப்பட்டது.

இதுதவிர பக்தாத்தின் புறநகர் பகுதியில் உள்ள ஈராக் நிலைகள் மீதும் 1000 கிலோ எடையுள்ள 9 குண்டுகள் வீசப்பட்டன. இரவு பகலாக ஆயிரக்கணக்கில் குண்டு வீசியதில் கட்டடங்கள் தீப்பற்றி எரிந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை பக்தாத்தின் மேற்குப் பகுதியில் உள்ள சந்தையில் அமெரிக்க ஏவுகணை வீழ்ந்து வெடித்ததில் 55 பேர் பலியாகினார்கள்.

அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று பக்தாத்தில் நடந்தது. அமெரிக்காவின் தொடர் குண்டுவீச்சைப் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான ஈராக்கியர்கள் இந்த இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவிலும், பக்தாத்தின் வடமேற்குப் பகுதியில் 20 குண்டுகள் வீசப்பட்டன.

இதுதவிர ஈராக்கின் வடபகுதியில் உள்ள மோசல், தெற்குப் பகுதியில் உள்ள பஸ்ரா, கர்பலா, நசாப், நஸிரியா ஆகிய பகுதிகளிலும் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் இடைவிடாமல் நேற்று குண்டுகளை வீசின.

பஸ்ரா நகரில் அதிகாலை 4 மணிமுதல் 6 மணிவரை தொடர்ச்சியாக குண்டுகள் வீழ்ந்தவாறே இருந்தன. பஸ்ரா நகரின் 3 முனைகளையும் பிரிட்டிஷ் படைகள் சுற்றிவளைத்துள்ளன.

பஸ்ரா நகரில் ஆளும் பாத் கட்சியின் தலைமை அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகம் மீதும் பிரிட்டிஷ் விமானங்கள் குண்டுகளை வீசன. இதில் அந்த அலுவலகம் தரைமட்டமாகிவிட்டது.

பஸ்ரா நகரை விட்டு பொதுமக்கள் கூட்டம் கூட்டமாகத் தொடர்ந்து வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. (ஒ)

### ஈராக் போர் தொடர்பான நேற்றைய நிலைவரங்கள்

★ ஈராக் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதவி விலகிய பிரிட்டிஷ் அமைச்சர் ரொபின்குக் ஈராக் போரில் பங்கேற்கும் பிரிட்டிஷ் துருப்புக்களை உடனடியாகத் திருப்பி அழைக்கும்படி பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயருக்கு கடும் தொனியில் தெரிவித்துள்ளார்.

★ கர்பாலா நகரின் அருகே ஈராக்கிய இராணுவ வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகித்த களஞ்சியத்தை அழித்துவிட்டதாக பிரிட்டிஷ் போர் விமானிகள் தெரிவித்தனர்.

★ ஈராக்கியவீரர்களின் தாக்குதலில் அமெரிக்கப்படையினர் இருவர் இறந்தனர்.

★ அமெரிக்கப் பத்திரிகையான 'நியூஸ்டே'யின் செய்தியாளர்கள் இருவர் ஈராக்கியரிடம் சிக்கியுள்ளதாக நம்பப்படுகிறது.

★ ஈராக்கிய அதிகாரிகள் ஐவரைக் கொன்றுவிட்டதாகவும் குடியரசுப் படையின் கேணல் தர அதிகாரி ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் பிரிட்டிஷ் இராணுவம் கூறியது. (ஒ)



## சதாமின் மகனது மாளிகையை குறிவைத்து நேற்று தாக்குதல்!

பக்தாத்,மார்ச்31

ஈராக்மீது தரைவழித் தாக்குதலை தற்காலிகமாக நிறுத்தியுள்ள அமெரிக்கக் கூட்டணிப் படைகள் பக்தாத நகரம் மீது வான்வழித் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளன.

நேற்று அதிகாலை பக்தாத்தின் மையப்பகுதியில் ஒன்றன் பின் ஒன்றாக 4 குண்டுகள் வீழ்ந்தன. சதாம் ஹுசைனின் மகன் குவாசியின் மாளிகையை குறிவைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் குவாசியின் அரண்மனை தகர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே போர் தொடங்கிய போதும் இந்த மாளிகை மீது பல தடவை குண்டுவீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால், அந்தத் தாக்குதல்களை விட பயங்கரமான தாக்குதல் நேற்று நடத்தப்பட்டது. சதாமின் சிறப்பு அதிரடிப்படைக்கு தலைமை தாங்குபவர் குவாசி என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

### ஈராக் போரா? கைக்குழந்தையா?

## அமெ.பெண் அதிகாரியின் மனப் போராட்டம் இது

லொஸ் ஏஞ்சல்ஸ்,மார்ச்31

கணவரை போருக்கு அனுப்பிவிட்டு கைக்குழந்தையுடன் இருக்கும் அமெரிக்கக் கடற்படை பெண் பொறியியலாளர் இப்போது மனப்போராட்டத்தில் சிக்கியிருக்கிறார்.

ஜெனீபர் வாஷிங்ரன் என்ற அப்பெண் அமெரிக்கப் படையில் பொறியியலாளராகப் பணியாற்றுகிறார். அவரது கணவரும் கடற்படையில் பணியாற்றுகிறார். அவர்களுக்கு நான்கு மாத வயதான குழந்தை உள்ளது.

ஜெனீபரின் கணவர் ஈராக்கிற்கு போர்ப் பணிக்கு அனுப்பப்பட்டார்.

கணவர் பிரிந்து களத்திற்கு சென்றாலும் மனத்தைத் தேற்றிக்கொள்ள கைக்குழந்தை இருக்கின்றதே என்று இருந்த ஜெனீபருக்கு அவரும் உடனே போர்க்களத்துக்கு விரைந்தாக வேண்டும் என்று மேலிடம் உத்தரவிட்டது.

"என் குழந்தையை விட்டு வரமுடியாது என்று கூறினேன். ஆனால், கட்டாயமாகப் போய்த்தான் தீரவேண்டும் எனகிறது மேலிடம். குழந்தை பற்றிக் கூறினால் அதனை தத்துக்கொடுத்து விடலாம் என்று யோசனை கூறுகிறது இராணுவ மேலிடம். என் பிள்ளையை யாருக்கும் தத்துக்கொடுக்கமாட்டேன்" என்று வேதனை பொங்கக் கூறுகிறார் ஜெனீபர். (ஒ)

## 2 அமெரிக்கப் படைவீரர்கள் ஆப்கானில் உயிரிழப்பு!

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் அமெரிக்க விசேட அதிரடிப்படையினர் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

தென்மேற்கு ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணி மீது நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இவர்கள் உயிரிழந்தனர்.

தலிபான்களின் வலுக்கோட்டையாகவுள்ள கந்தகாரில் இருந்து நூறு கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள 'ஜேரஸ்க்' என்ற இடத்திலேயே இச் சம்பவம் இடம்பெற்றது.

### உலக அரங்கில்

இப்பகுதியில் மறைந்துள்ள தலிபான் மற்றும் அல்கெய்டாவினரை தேடும் நடவடிக்கை ஒன்றை நேற்றுமுன்தினம் காலையில்தான் அமெரிக்கப் படைகள் ஆரம்பித்திருந்தன. அன்றிரவே இரண்டு அமெரிக்கப் படையினர் உயிரிழக்க நேரிட்டுள்ளது.

இதேவேளை, இப்பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் தலிபான் அல்லது அல்கெய்டா உறுப்பினர்கள் என்று கூறப்படும் 4பேர் கொல்லப்பட்டதாகவும் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் - அப்பிரதேச ஆளுநர் தெரிவித்தார். (ஒ)

# 'பொடா' தொடர்பான நீதிமன்ற வழக்கில் வைகோவுக்கு எதிராக மத்திய அரசு மனு!

## ஆளும் கூட்டணியிலிருந்து தமிழகக் கட்சிகள் விலகும்நிலை

புதுடில்லி,மார்ச்31

இந்தியாவில் 'பொடா' சட்டம் குறித்து - வைகோவுக்கு எதிராக - மத்திய அரசு மனு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இதனையடுத்து மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பிணக்கு உருவாகியுள்ளது.

தமிழகக் கட்சியான ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ, கடந்த ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் திகதி 'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். மதுரையை அடுத்த திரு மங்கலத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளை அவர் ஆதரித்துபேசியதற்காக தமிழக அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது.

'பொடா' சட்டத்தை எதிர்த்து இந்திய உயர் நீதிமன்றத்தில் வைகோ வழக்குத் தொடர்ந்துள்ளார். பொடா சட்டத்தின் 21ஆவது பிரிவு இந்திய அரசியல் சட்டத்துக்கு எதிரானது. இது பேச்சுரிமையை பாதிக்கிறது என்று மனுவில் வைகோ கூறி இருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை அடுத்த வாரம் நடைபெறும் என்றும் அப்போது அவர் விடுதலை செய்யப்படுவார் என்றும் ம.தி.மு.கவினர் ஆவலோடு எதிர்பார்த்து இருந்தனர்.

இதற்கிடையில், வைகோவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு ஒரு மனு தாக்கல் செய்துள்ளது.

அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது:-

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலையைத் தொடர்ந்து நாடு முழுவதும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தடைவிதிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கும் இந்தியாவில் முற்றிலும் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. இந்த இயக்கத்துக்கு ஆதரவாக யார் பேசினாலும் அது தீவிரவாதச் செயலாகத்தான் கருதப்படும்.

அந்த வகையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மதுரையை அடுத்த திருமங்கலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசியிருப்பது ஒரு தீவிரவாதச் செயலாகத்தான் மத்திய அரசு கருதுகிறது. இதனால்தான் அவர் மீது 'பொடா' சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகக் கருதுகின்றோம்.

'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் நடவடிக்கை என்பது நாடு முழுவதும் ஒவ்வொரு மாநிலங்களிலும் தீவிரவாதத்தை ஒழிக்க எடுக்கப்படும் ஒரு நடவடிக்கைதான்.

வைகோ தனது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவான பேச்சு என்பது அடிப்படை உரிமையை பறிக்கும் வகையில் அமைந்தது அல்ல. ஆகையால் வைகோவின் மனுவை எந்தவித விசாரணையும் இல்லாமல் தள்ளுபடி செய்யவேண்டும்.

இவ்வாறு மத்திய அரசு தனது மனுவில் கூறியுள்ளது.

வைகோவுக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்துள்ள இந்த மனு ம.தி.மு.க. வட்டாரத்தில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வைகோ விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வேளையில் மத்திய அரசு இப்படி ஒரு நடவடிக்கையை எடுத்திருப்பது ம.தி.மு.க தலைவர்களுக்கு கவலையை அளித்து இருக்கிறது.



வைகோ விடுதலைக்காக தமிழ் நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் தி.மு.க. மற்றும் அதன் தோழமை கட்சிகள் உண்ணாவிரதம் இருந்து மத்திய அரசுக்கு தங்களது எதிர்ப்பை காட்டி இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மத்திய அமைச்சரவையில் தற்போது ம.தி.மு.க. சார்பில் கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோர் அமைச்சர்களாக உள்ளனர். அவர்கள் இருவரும் மத்திய அரசின் செயலை எதிர்த்து மந்திரி பதவியை ராஜினாமா செய்யலாம் என்று பரபரப்பாகப் பேசப்படுகிறது.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY

# கணேசநாதன் கவிஷனா

மாவிட்டபுரம் தெல்லிப்பழையைச் சேர்ந்த
கணேசநாதன் வாகேஸ்வரி தம்பதிகளின்
*செல்வப் புதல்வி*
செல்வி கவிஷனா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (31.03.2003) திங்கட்கிழமை தனது அப்பா, அம்மாவுடன் பிரான்ஸில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடு கிறார். அவரை வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் அருள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்க வாழ்கவென அம்மப்பா, அம்மம்மா, சித்திமார், மாமாமார், அத்தைமார், அண்ணன்மார் அனைவரும் வாழ்த்துகின்றோம்.

மெதடிஸ் பாடசாலை வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை. ஜெகன் *(மாமா)* (16025)


# அ.அட்டைகள் வந்து சேர்ந்தன

தென்மராட்சி,மார்ச்31

தென்மராட்சி பிரதேச செயலகத்தினூடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் 300இற்கும் மேற்பட்டோரின் அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

இந்த அடையாள அட்டைகள் அந்தந்த கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட உள்ளதாகவும் - உரியவர்கள் அவற்றினைப் பெற்றுக்கொள்ளுமாறும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-117)

# பிரதி வியாழன்தோறும் நடமாடும் மருத்துவசேவை

தென்மராட்சி,மார்ச்31

பளைப் பிரதேச சபையின் ஆயுர்வேத சிகிச்சைப் பிரிவினர் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள மாசார், முகாவில் ஆகிய பகுதிகளில் நடமாடும் வைத்திய சேவையினை பிரதி வியாழக்கிழமைகளில் நடத்தவுள்ளனர்.

நடமாடும் ஆயுர்வேத சிகிச்சைப் பிரிவு கடந்த வியாழக்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டதாக பிரதேசசபைச் செயலாளர் இ.து.சிவராசா தெரிவித்தார். (எ-117)

# தும்புத் தொழிற்சாலை மீண்டும் இயங்குகின்றது

1990 ஆம் ஆண்டு மூடப்பட்ட இயக்கச்சி தும்புத் தொழிற்சாலை வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்துறை திணைக்களத்தினால் மீண்டும் இயக்கச்சி ஊறணியன்பற்று கிராமத்தில் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பளைப் பிரதேச செயலர் சி.புத்திசிகாமணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பளை அரசியற்துறைப் பொறுப்பாளர் வின்சன், பளைப் பிரதேச போர் எழுச்சிக் குழுவின் பொதுச் செயலாளர் நா. பூபாலசிங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க பளைப் பிரிவுத் தலைவர் நா.கார்த்திகேசு, நிர்வாக சேவை இணைப்பாளர் தங்கவேல் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-117)

# சைவசமய அபிவிருத்திச் சபை பளையில் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,மார்ச்31

பளைப் பிரதேச சைவசமய அபிவிருத்திச் சபை கடந்த வெள்ளியன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

பளைப் பிரதேச செயலர் அபுத்திசிகாமணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த இந்துகுருமார், ஆலய பூசகர்கள், இந்து சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள், அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இந்துசமய கலாசார திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறநெறி பாடசாலைகளுக்கான புத்தகங்கள் இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயம், புலோப்பளை அறத்தி அம்பாள் ஆலயம், மாசார் பிள்ளையார் கோவில், இத்தாவில் முருகமூர்த்தி ஆலயம் ஆகியவற்றில் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. (எ-117)

# இறைவார்த்தைகளை ஆழப் பதிப்போம்

## தவக்காலச்சிந்தனை 27 ஆம் நாள்

வழிபாடுகள் யாவும் இதய சுத்தியுடன் செய்யப்படவேண்டும். கல்லும், முள்ளும், கரடும், முரடும் நிறைந்தது தான் எம் வாழ்க்கைப்பாதை. இப் பாதையைச் செம்மைப்படுத்தவே இம் மாபெரும் கொடையாகிய தவக்காலம் எமக்கு அருளப்பட்டிருக்கின்றது. அன்பு எமது உள்ளத்தில் ஊற்றெடுக்கும்போதுதான் எம் இல்லத்தில்- சமுதாயத்தில் - நாட்டில் நிறைந்த அமைதியைப் பெறமுடியும்.

வாழ்க்கை இல்லாத வழிபாடுகள அர்த்தமற்றதாகிவிடுகின்றன. நோன்பு இருப்பதிலும் அழகழகான பொருள்களை அடுத்தவர் காணும் விதமாக ஆலயத்திலே காணிக்கையாக அர்ப்பணிப்பதிலும் போலியான வழிபாடுகளிலும் இறைவன் மகிழ்வதில்லை.

"நீ பலி செலுத்த வரும்போது- உன் அயலான் உன் மீது மனத்தாங்கலாக இருக்கின்றான் என்பதை நீ உன உள்ளத்திலே உணர்ந்து கொண்டால் உன் காணிக்கையை அப்படியே பீடத்தில் வைத்துவிட்டு அவனுடன் நீ சென்று சமாசம் செய்த பிற்பாடே உன காணிக்கையைச் செலுத்து" என்பது இறைவாக்காகும்.

கண்ணுக்கு முன்பாக நிற்கும் உன சகோதரனை சினத்தோடும் வெறுப்போடும் ஒதுக்கிவைத்துவிட்டு "யேசுவே நானும்மை நேசிக்கிறேன்" என்று கூறுவதில் அர்த்தமேது? "ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்" என்ற அழகான வரிகளை ஆலயத்தில் பாடிவிட்டு அவனது துன்பதுயரங்களில் கைகொடுக்க முன்வராதமை ஏன்? பணம் மட்டும் கொடுத்துத்தான் அவனுக்கு ஆறுதல் அளிக்க முடியும் என எண்ணுவது தவறு. அவனுடைய துன்பவேளையில் ஓர் ஆறுதல் வார்த்தை கூறவோ, அவனது முகத்தைக் கண்டு புன்னகை செய்யவோ ஏன் முடியாது?

எம்முடன் கூடப்பிறந்தவர் மட்டுதான் எமது சகோதரர் என்று கூறிவிட முடியாது. அன்பில் உருவில் படைக்கப்பட்ட மனுக்குலம் முழுவதும் எம் சகோதரன் என்பதை உணர்வோம்.

எனவே, ஆலய வழிபாடுகள் யாவும் எம் நல்வாழ்வுக்கு எம்மை இட்டுச் செல்ல வேண்டும். ஆலயத்தில் மறையுரையில், நற்செய்தியில், செவிமடுக்கும் இறைவார்த்தைகளை நல்ல நிலத்தில் விழுந்த விதை போல உள்ளத்தில் ஆழப் பதிப்போம்.

தவம் குருசுமுத்து


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புலோலி மத்தி J/409 கிராமசேவையாளன்
**அந்தோனிப்பிள்ளை பத்திநாதர்**
அவர்கள் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சேவையாற்றியபோது நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 01. 01. 1993 இல் இருந்து தரம் 1 இற்கு பதவி உயர்த்தப்பட்டமைக்காகவும் தற்போது பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவில் புலோலிமத்தி (J/409) பகுதியில் தன்னலமற்ற மக்கள் சேவையை ஆற்றி வருகின்றமைக்காகவும் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவிஉயர்வுகளையும் சிறப்புக்களையும் பெற்று கடமை கண்ணியத்துடன் பணியாற்ற எல்லாம் வல்ல அல்வாய் அரசடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

அல்வாய் வடக்கு, அல்வாய். (16131)
இளங்கோ சனசமூக நிலையம், முத்தமிழ் மன்றப் படிப்பகம்.

## சுழிபுரம் மேற்கு ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் தேவஸ்தானம்



எமது ஆலய மண்டபத் திருப்பணிக்கு ரூபா ஐம்பதாயிரம் (50,000) முதற்கட்ட நிதியாக வழங்கிய மாண்புமிகு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் **தி.மகேஸ்வரன்** அவர்களையும், சமூகசேவையாளன் **செ.செல்வராசா** அவர்களையும் இறைவன் திருவருளால் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

(16151) - பரிபாலன சபையினர்

## சமாதானத்தின் தேவன்
## இயேசு உங்களை அழைக்கிறார்
## தெய்வீக சுகமளிக்கும் நற்செய்திக் கூட்டங்கள்
## விடுதலையின் செய்தியும், ஜெபமும்

தீர்க்கதரிசி :
*சகோ. டானியேல்* (ஜேர்மனி)
போதகர் :
*போல் யேசுதாசன்* (தென்னிந்தியா)

இயேசு சொன்னார்! நிங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்தேயு 11:28)

- கண்ணீரில் இருந்து விடுதலை
- மரண இருளில் இருந்து விடுதலை
- தீராத நோயில் இருந்து விடுதலை
- பின் மாற்றத்தில் இருந்து விடுதலை
- பில்லி சூனியங்களில் இருந்து விடுதலை
- பிசாசின் கட்டுக்களில் இருந்து விடுதலை
- பாவ பழக்க அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை
- இயேசு தருகின்றார் இன்றே தருகின்றார்

*இடம்* : அல்பிரட் துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம்.
*காலம்* : 02.04.2003 முதல் 05.04.2003 வரை
*நேரம்* : மாலை 4.00 தொடக்கம்

சாதி, சமய, சபை பாகுபாடு இன்றி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:
*தமிழ் மிஷன் சபை ஊழியர்கள்,*
*த. பெ. இல. 147, யாழ்ப்பாணம்.*
(16140)

## எக்ஸ்போ ஏவியேஷன்

இல. 1E, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 3891
071 348888, 071 349999, 0777 730666

| *காலைநேர விமானசேவை* | புறப்படல் இரத்மலானை | வந்தடைதல் பலாலி | புறப்படல் பலாலி | சென்றடைதல் இரத்மலானை |
|---|---|---|---|---|
| திங்கள், செவ்வாய், புதன் | 06.30 | 07.30 | 08.15 | 09.15 |
| வெள்ளி | 10.45 | 11.45 | 12.30 | 13.30 |
| சனி | 08.15 | 09.15 | 10.00 | 11.00 |
| *மாலைநேர விமானசேவை* | | | | |
| செவ்வாய் | 12.45 | 13.45 | 14.30 | 15.30 |
| வெள்ளி, சனி | 16.00 | 17.00 | 17.45 | 18.45 |
| ஞாயிறு | 14.00 | 15.00 | 15.45 | 16.45 |

குறிப்பு :- புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தமது மீள் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

** குளிரூட்டப்பட்ட இலவச போக்குவரத்து
யாழ் - பலாலி - யாழ்
இரத்மலானை - கொட்டாஞ்சேனை - இரத்மலானை

** வெளிநாட்டு பிரஜைகளுக்கும், உள்நாட்டு பிரஜைகளுக்கும் ஒரே வகையான கட்டணமே அறவிடப்படுகிறது.
ஒருவழி - 2,425/-
இருவழி - 4,550/-
(சி-27033)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இராசம்மா கனகரத்தினம்**

மண்ணில் : 22.07.1937
விண்ணில் : 11.04.2002

அம்மா என்ற சொல்லுக்கு
இலக்கணம் அமைத்த எம்
அன்புத் தெய்வமே!
கள்ளமில்லா வெள்ளை உள்ளமே
கருணையின் வடிவே எங்கள் அம்மா
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை தினம் தினம் பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர்,
தாய், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

*கைதடி - நுணாவில், சாவகச்சேரி.* (16145)

# உதயன்

## அமெரிக்க முன்மாதிரியை பின்பற்றுமா இந்தியா?

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறவிருக்கின்றது.

அதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் திட்டங்களை வடிவமைத்து மேற்கொள்வதற்குரிய இரண்டு கூட்டங்கள் நாளை பிறக்கும் ஏப்ரல் மாதத்தில் இடம்பெறவுள்ளன.

ஒன்று - ஏப்ரல் ஆறாம் திகதி கொழும்பில், மற்றது - ஏப்ரல் பதினான்காம் திகதி அமெரிக்காவின் கொலம்பிய மாநிலம் வாஷிங்ரனில்.

ஜூனில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் முழு இலங்கைக்குமான உதவிகள் குறித்து ஆராயப்படும். என்றாலும், இக்கூட்டத்தில் விசேடமாக வடக்கு - கிழக்குப் புனரமைப்பு முக்கிய விடயமாகக் கருத்தில் எடுக்கப்படவிருக்கின்றது.

அந்த வகையில் இந்த மாநாட்டில் இலங்கைத் தரப்புப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் பங்குபற்றுவது முக்கியத்துவம் பெறுகின்றது.

ஜப்பானில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு நான்கு தரப்புகள் இணையாகத் தலைமை வகிக்க இருக்கின்றன. ஜப்பான், அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவையே அவை.

அமெரிக்கா தனது நாட்டில் புலிகளுக்குத் தடைவிதித்துள்ளது. ஆனால், அதற்காக யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் புலிகளை அது ஒதுக்கி வைத்துவிடவில்லை.

கடந்த டிசெம்பரில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிச் சந்திப்பு, 'சமாதான ஆதரவு மாநாடு' என்ற பெயரில் நோர்வேயில் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களும் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர். புலிகளைத் தனது நாட்டில் தடைசெய்திருந்த போதிலும், புலிகள் பங்குபற்றிய அந்த மாநாட்டை அமெரிக்கா பகிஷ்கரிக்கவில்லை. பங்குபற்றியது. அதுவும் தனது அரசின் முக்கிய பிரமுகர்களுள் ஒருவரான பிரதி இராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜை அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வைத்துத் தனது பிரசன்னத்தை - பங்குபற்றலை - முறையாக எடுத்தியம்பியது; தனது அரசின் கருத்தை அங்கு தெளிவாக முழங்கவும் வைத்தது.

இப்போது, ஜப்பானில் நடைபெறும் உதவும் நாடுகளின் உத்தியோகபூர்வக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர்கள் பங்குபற்றப் போகின்றார்கள். அந்தக் கூட்டத்துக்கு அமெரிக்கா தலைமை வகிக்கப்போகின்றது.

அதேசமயம், இந்த உதவும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னேற்பாடாக தனது நாட்டில் கொலம்பியா மாநிலத்தின் வாஷிங்ரனில் கூட்டம் ஒன்றை 14ஆம் திகதி நடத்துகின்றது அமெரிக்கா. இலங்கை அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை பின்னணியில் நின்று தூண்டி, ஒழுங்குபடுத்தியுள்ளார். இந்தக் கூட்டத்துக்கும் புலிகளின் பிரதிநிதிகளை அமெரிக்கா அழைக்கக் கூடும் எனத் தெரிகின்றது.

வழமைபோல தமது இயக்கத்தின் மூத்த பிரமுகர்களை இந்தக் கூட்டத்துக்கு அழைத்தால் அதில் பங்குபற்றலாம் என்ற நிலைப்பாட்டில் புலிகளின் தலைமை இருப்பதாகத் தெரிகின்றது.

ஆக, புலிகளை 'பயங்கரவாத இயக்கப் பட்டியலில்' சேர்த்து, அந்த இயக்கத்துக்கு தனது நாட்டில் அமெரிக்கா தடைவிதித்துள்ளபோதிலும், இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் புலிகளுக்கு உள்ள பிரதிநிதித்துவ உரிமையை - யதார்த்தத்தை - அது புரிந்துகொண்டுள்ளது; ஏற்றுக்கொண்டுள்ளது.

அதனால்தான் புலிகள் பங்குபற்றும் கூட்டத்தில் அமெரிக்கா தனது அரசின் மூத்த பிரமுகர்களை பங்குபற்றச் செய்கின்றது; புலிகள் பங்குபற்றும் கூட்டத்துக்குத் தலைமைவகிக்க இணங்குகின்றது; புலிகளைத் தனது நாட்டுக்கு அழைத்து ஆலோசனைக் கூட்டங்களில் பங்குபற்றக் கோருகின்றது.

சின்னப்பிள்ளைகள் ஒருவர் மற்றொருவருடன் கோபித்துக்கொண்டால் "அவரோடு கதைக்கமாட்டேன்; பேசமாட்டேன்; பழகமாட்டேன்!" என்று அடம்பிடிப்பது வழமை.

அந்தப் பாணியில்தான் இலங்கை விடயத்தில் - புலிகள் விவகாரத்தில் - நமது அண்டை நாடான இந்தியா நடந்துகொள்கின்றது.

"புலிகளோடு பேசமாட்டேன்; புலிகள் பங்கு மற்றும் கூட்டத்தில் கலந்துகொள்ளமாட்டேன்; புலிகளுக்கு ஆசனம் தரமாட்டேன்!" என்று சிறுபிள்ளைத்தனமாக இந்தியா செயற்படுவது ஈழத்தமிழர்களுக்கு வேதனை தருவதாகும்.

இது விடயத்தில் அமெரிக்கா போன்ற நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றுவது இந்தியாவுக்கு நாகரிகமாக இருக்கும்.

## நிவாரண அரிசியை இனி கூ.சங்கங்களே கொள்வனவு

யாழ்ப்பாணம்,மார்ச்31

குடாநாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை வழங்கத் தேவையான அரிசியை உள்ளூரில் ப.நோ.கூ. சங்கங்கள் கொள்வனவு செய்யவிருக்கின்றன.

திறைசேரிச் செயலர் சரித்த ரத்வத்த இது தொடர்பான அனுமதியை யாழ்.செயலகத்துக்கு வழங்கியுள்ளார்.

பெப்ரவரி மாதத்துக்குரிய நிவாரண விநியோகத்துக்கான அரிசியை கொள்வனவு செய்ய ப.நோ.கூ. சங்கங்களுக்கு முற்பணம் வழங்கப்படவிருக்கின்றது.

நிவாரணத்தொகையில் 50சதவீதத்துக்கு மட்டுமே அரிசி வழங்கவேண்டும் என்று சங்கங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரிசிக் கொள்வனவு தொடர்பாக ப.நோ.கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருடனான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 5ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவிருக்கின்றது.

நிவாரண விநியோகத்துக்கான அரிசிக் கொள்வனவில் கடந்த காலத்தில் நிலவிய மோசடி, ஊழல்களை அடுத்து அரிசிக் கொள்வனவை ப.நோ. கூ. சங்கத்திடம் கையளிப்பது என முடிவுசெய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ம-3)

## நாட்டு நடப்பு

கொட்டடா முரசம் தம்பி
கட்டிடம் உடைந்து போனால்
கட்டலாம் சீமெந்து வாங்கி
பெட்டகம் உடையுமானால்
பிறிதொன்று செய்யலா மன்றோ
கட்டிப் பொன் நகைகள் போனால்
கடைதனில் வாங்கி விடு
மட்டிலா தமிழ்பண்பு மாழின்
மாண்டது தமிழர் வாழ்வு
கொட்டடா! முரசம் தம்பி
கொள்கையாய் இதனை செப்பு
எட்டுத் திசையும் எங்கள்
எழுச்சியை எடுத்தியம்பு.

- விகடகவி.

## வங்கி மூலம் சம்பளம் வழங்கும் நடைமுறையில் தெளிவின்மை

### அரச ஊழியர்கள் கவலை

அச்சுவேலி,மார்ச்31

ஆசிரியர்கள் உட்பட மாகாண சபையின் கீழ் உள்ள அரச ஊழியர்களின் மாதாந்தச் சம்பளக் கொடுப்பனவை அவர்களது தனிப்பட்ட வங்கி கணக்குகள்மூலம் வழங்குவது என்ற புதிய நடைமுறையில் தெளிவில்லாத நிலை காணப்படுவதால் நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அரச ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாகாண சபையின் கீழுள்ள அரச ஊழியர்களின் மாதாந்தச் சம்பளக் கொடுப்பனவுகள் திணைக்களத் தலைவர் அல்லது பாடசாலை அதிபர்களினால் வங்கிகளில் பெறப்பட்டு பணமாக ஊழியர்களுக்கு வழங்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது.

புதிய நடைமுறையின் பிரகாரம் மாதாந்தச் சம்பளக் கொடுப்பனவை சம்பந்தப்பட்ட ஊழியரின் விருப்பத்திற்கு ஏற்ப முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கு மூலம் வழங்கலாம் என மாகாணக் கல்வி அமைச்சு திணைக்களத் தலைவர்கள் ஊடாக ஆலோசனை வழங்கியுள்ளது.

சம்பளக் கொடுப்பனவு தொடர்பான புதிய ஆலோசனையைத் தவறாகப் புரிந்துகொண்ட திணைக்களத் தலைவர்கள் சிலர் தமது அலுவலகத்தில் அல்லது பாடசாலையில் கடமை புரியும் அரச ஊழியர் அனைவரையும் தற்பொழுது குறிப்பிட்ட அலுவலகம் அல்லது பாடசாலையின் சம்பளக் கணக்கு இருக்கும் வங்கியில் தனிப்பட்ட கணக்குகளை உடன் ஆரம்பித்து ஏப்ரல் மாதச் சம்பளத்தை வங்கிக் கணக்கு மூலம் பெற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்துவதாகக் கூறப்படுகிறது.

சம்பளம் வழங்கும் புதிய நடைமுறை தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

சம்பளம் வழங்கும் புதிய நடைமுறை தொடர்பான அறிவுறுத்தல் அரச ஊழியர்களின் வசதியைக் கருத்தில்கொண்டு வழங்கப்பட்டுள்ள ஒரு ஆலோசனை. இதற்கு திகதி குறிப்பிட்டு எந்த வற்புறுத்தலும் செய்யப்படவில்லை. திணைக்களத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் சிரமமின்றி உரிய காலப்பகுதியில் சம்பளக் கொடுப்பனவைத் தமக்குக் கீழ் பணியாற்றுவோருக்கு வழங்குவது விரும்பத்தக்கது. சம்பளக் கொடுப்பனவுக்கு நிபந்தனை விதிப்பதை நிதிப் பிரமாணங்கள் வற்புறுத்தவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

மாதச் சம்பளத்தை வங்கியில் தனிப்பட்ட கணக்கு மூலம் பெற்றுக்கொள்வதில் உள்ள மேற்கூறிய சிரமங்கள் தொடர்பாக தொழிற்சங்கங்களுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-11)

### யு.என்.டி.பி. மற்றும் சிஸ்கோ இணைந்து

## 'இன்ரநெற்' உதவியுடன் கட்டடக்கலை பயிற்சிநெறி

### குடாநாட்டில் ஜூலைமுதல் அறிமுகம்

யாழ்ப்பாணம்,மார்ச்31

'இன்ரநெற்' உதவியுடன் கட்டடக்கலை தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் முன்வந்துள்ளது.

'சிஸ்கோ' நிறுவனத்தின் உதவியுடன் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிவகுப்பில் கட்டட பட வரைவு, கட்டடம் அமைத்தல், கட்டடம் பேணுதல் என்பன தொடர்பாக பயிற்சி வழங்கப்படும்.

ஜூலை மாத முற்பகுதியில் இந்தப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படும் என்றும் -

உலகளாவிய ரீதியில் பின்பற்றப்படும் கட்டடக்கலை தொடர்பான பல்வேறு விடயங்களையும் 'இன்ரநெற்' மூலம் மாணவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும் என்றும் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சாவதேச ரீதியில் கணிப்பீட்டை மேற்கொள்ளக்கூடிய வகையில் இந்தப் பயிற்சிநெறி நடத்தப்பட்டு, இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (எ-180)

## மணல், கல் தட்டுப்பாட்டால் கட்டுமானப் பணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்.மாவட்டத்தில் புனரமைப்பு வேலைகளுக்கான மணல், கல் போன்றவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் புனரமைப்புப் பணிகள் மற்றும் கட்டட வேலைகள் தாமதமடைந்துள்ளன.

குடாநாட்டில் புனரமைப்பு வேலைகளுக்கு அரசு நிதி ஒதுக்கியும் கல், மணல் ஆகியவற்றின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாகக் கட்ட ஒப்பந்தகாரர்கள் குறித்த காலப்பகுதியில் பணிகளை முடித்துக்கொடுக்க முடியாமல் உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது வீடுகள் மற்றும் வர்த்தக நிலையக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுக்கான மணல், கல் என்பவற்றுக்கு தட்டுப்பாடு காரணமாக அதிக விலை கொடுக்கவேண்டியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தனியாருடன் போட்டி போட்டு மணல், கல் என்பவற்றை அதிக விலைக்கு அரச நிறுவனங்களால் வாங்க முடியாததால், புனரமைப்புப் பணிகளை சீராக மேற்கொள்ள முடியவில்லை என்று அரச திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-175-180)

### நாளை

பங்குனி 18
செவ்வாய்க்கிழமை
(01.04.2003)
திதி: அமாவாசை
பின்னிரவு 1.25 வரை.
நட்சத்திரம் : உத்தரட்டாதி
முன்னிரவு 11.06 வரை.
சுபநேரம் : 10.41 - 12.11
ராகுகாலம் : 3.11 - 4.41
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

சுய பச்சாதாபம் ஒரு நோய். அதனை ஒழிக்காத வரை முன்னேற முடியாது.

### அடுத்த வருடம்முதல்

## சாதாரணதர மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பாடம்

கொழும்பு,மார்ச்31

ஜி.ச.ச.சாதாரண தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு, அடுத்த வருடம்முதல் தகவல் தொழில்நுட்பமும் ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

இதனை கல்வி அமைச்சர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

பாடசாலை நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் கல்வி அறிவுடையோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றபோதிலும், தகவல் தொழில்நுட்ப அறிவு உடையவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே உள்ளது.

நாட்டில் உள்ள 800 பாடசாலைகளில் சகல வசதிகளும் கொண்ட கணனிக் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அடுத்த 2 மாதங்களில் 200 பாடசாலைகளில் இவை திறந்துவைக்கப்படும். மேலும 450 பாடசாலைகளில் அடுத்த வருடம் கணனிக் கற்கை நெறிகள ஆரம்பித்துவைக்கப்படும்.

இத்திட்டத்திற்கென மொத்தம் 170 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-12)

## கூட்டமைப்பில் சேர்ந்தே ரெலோ போட்டியிடும்!

### முதல்வர் ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ரெலோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்தே போட்டியிடும் என்று அக்கட்சியின் முதல்வர் என்.ஸ்ரீகாந்தா நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துப் போட்டியிடக்கூடும் என்று கூட்டணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் அண்மையில் தெரிவித்திருந்தமை குறித்துக் கருத்துக்கேட்டபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

நினைத்தபோது கூட்டுச்சேரவும் பின்னர் தனித்துப் போட்டியிடவும் எண்ணுவது அவர்களது நிலைப்பாடாக இருக்கலாம். ஆனால், நாம் அவ்வாறு நடந்துகொள்ளமாட்டோம். நிச்சயமாக கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நான்கு கட்சிகளும் ஒரே அணியின் கீழேயே போட்டியிடும். இதுபற்றி யாரும் சந்தேகிக்கத் தேவையில்லை.

அவ்வாறு அவர்கள் (கூட்டணி), தனித்துப் போட்டியிட முன்வந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சி மக்களால் தூக்கி எறியப்படும் நிலையே உருவாகும் - என்று எச்சரித்தார் ஸ்ரீகாந்தா. (ஐ-10)

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். கொடிகாமம்

**பாடசாலைப் பிள்ளைகளுக்கான சீருடை விநியோகம்**

மேற்படி விநியோகம் இன்று (31.03.2003) திங்கட்கிழமை முதல் (04.04.2003) வெள்ளி வரை காலை 9.00 மணிமுதல் 5.00 மணிவரை பிரதம சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும். எனவே, தயவுசெய்து குறிப்பிட்ட தினத்திற்குள் பெற்றுக்கொள்ளவும்.

*தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,*
*கொடிகாமம். 30.03.2003.* (சி-27053) - பொது முகாமையாளர்.

## கண்ணீர் அஞ்சலி

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை
உறுப்பினர் ஆகிய

### இராசு மகாதேவன்

அவர்கள் 28.03.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கோட்டைக்காடு,* ஆலய பரிபாலனசபையும்
*மல்லாகம்.* (16126) இந்து இளைஞர் தொண்டர் சபையும்.

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்
அ.நடராசசுந்தரம் அவர்களின்
பாசமிகு தந்தையார்

### க.அப்புக்குட்டி

அவர்கள் 16.03.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானதையிட்டு நாம் மிகவும் வருந்துகின்றோம். கவலையுறும் அவரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவர்களின் துயரிலும் பங்குகொள்ளுகின்றோம்.

*உடுவில் முருகமூர்த்தி*
*வித்தியாசாலை.* (16066) பாடசாலைச் சமூகம்.

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல், சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
*சகல வியாதிகளையும்*
*குணப்படுத்துபவர்:*

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி எண்: 222 2459* (15081)

## விற்பனைக்கு

KTV
Sun News } *Sun net works*
SCV
Dicorder + Pc Card
விற்பனைக்கு உண்டு
**விலை 37500/-**
மேலதிக விவரங்களுக்கு:
**அருண் வீடியோ மூவி**
நெல்லியடி.
0777 730 332 (16130)

## யாழ்ப்பாணம் பஸ்நிலையம்
## ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

• மேற்படி ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவான இன்று (31.03.2003) திங்கள் மாலை 5.30 மணிக்கு பட்டி மன்றம்நடைபெறும்.

*இன்றைய சமுதாயத்தைப் பெரிதும் சீர்ப்படுத்துவது*
*சட்டமா? சமயமா?*

நடுவர்
சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் *ஆசிரியர்*

| சட்டம் | சமயம் |
|---|---|
| திரு. T.கருணாகரன் | திரு. T.முகுந்தன் |
| திரு. S.ஜங்கரன் | திரு. S.சிறீதரன் |
| திரு. L.துஷிகரன் | திரு. T.தயாபரன் |

(16115) - மேற்படி ஆலய நிர்வாகசபை.

## அரிய சந்தர்ப்பம்!

மொபி ஸ்டார் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற, யாழ்.மாவட்டத்தின் ஏக விநியோகஸ்தர்களான றெயின்போ லிங்ஸ் (*Rainbow Links*) வழங்கும்


மொபிடெல் தொலைபேசி இணைப்புக்கள்.
குறைந்த விலையில் கையடக்கத் தொலைபேசிகள்
மொபிடெல் இணைப்புடன் மேசை தொலைபேசிகள்
அனைத்திற்கும் ஒரு வருட உத்தரவாதம்

| | |
|---|---|
| Ericsson - 1228d | 8800/- |
| Ericsson - LX / KF 788 | 9200/- |
| Motorola - M 70A | 6800/- |
| Motorola - 650 | 7000/- |
| Star TAC | 7500/- |
| Nokia - 918 | 8000/- |
| Nokia - 3360 | 16000/- |
| Microtel (Land Phone) | 16000/- |

**Rainbow Links**

**Hospital Road Junction,**
**First Cross Street,**
**Jaffna.**
(16133) Tel - 222 3170

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



### அமரர் பொன்னையா வாதவூரன்

***(Ret. - Chief Clerk, Railway Department)***

அன்னை மடியில் 09.05.1925 — ஆண்டவன் அடியில் 31.03.2001

**திதி : ஏப்ரல் 08.04.2003**

அன்பின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய்,
பாசத்திற்கு இலக்கணமாய் இருந்து எம்மையெல்லாம் வழிநடத்தி
வாழ்ந்து காட்டிய அன்புத் தெய்வமே! அருமை அண்ணாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டு என்றென்றும் பிரியாது!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*சிவசக்தி கோயிலடி,* தங்கள் பிரிவால் துயருறும்:
*அச்சுவேலி தெற்கு,* அன்புச் சகோதரி
*அச்சுவேலி.* (16139) திருமதி கௌரி நாகேந்திரன்

## டயமண்ட் சிமெந்து
## DIAMOND CEMENT

லங்கா சிமெந்து நிறுவனத்தால் உயர்தர நிர்ணயத்திற்கமைவாக (பிரித்தானிய தரம் B.S.S.12.1991 இலங்கை கட்டளைகள் நிறுவனம் S.L.S.I, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் N.B.R.O. தரச் சான்றிதழ்) யாழ்.குடாநாட்டு கட்டட நிர்மாணத் தேவைகளுக்கு (REINFORCED CON CRETE WORK) விற்பனை செய்யப்பட்டு வருகின்ற டயமண்ட் சீமெந்து தரத்தில் உறுதியுடனும், மக்களது பாவனையில் கூடிய இடத்தினையும், திருப்தியினையும் பெற்றுக்கொண்டதுடன் இப்பொழுது யாழ்.குடாநாட்டு சந்தையில் தாராளமாக விற்பனையில் உள்ளது.



**டயமண்ட் சிமெந்து 50 Kg**

☆ சிமெந்து மொத்த/சில்லறை விற்பனை வியாபாரிகள்
☆ அரச/தனியார் கட்டட ஒப்பந்தகாரர்கள்
☆ புதிய வீடுகள், கடைகள் கட்டும் காணி உரிமையாளர்கள்

உங்கள் உடனடி சிமெந்து (டயமண்ட்)
தேவைகளுக்கு / விற்பனைக்கு அழையுங்கள்......

**தொலைபேசி இலக்கம் 222 5574**

நியாயமான விலை, விற்பனையாளர்களுக்கு சலுகைகள்,
நீங்கள் குறிப்பிடும் இடங்களுக்கான
நேரடியானதும் திருப்திகரமானதுமான விநியோகம்
உடன் தொடர்பு கொள்பவர்களுக்கு
நேரடி விநியோகம் இலவசம்.

*தொடர்புகளுக்கு:*
லங்கா சிமெந்து நிறுவனம்.
விற்பனை நிலையம்
இணுவில் - சுன்னாகம்
கல்வியங்காடு, கொக்குவில். (சி-27048)

# சமூகங்களிடையே மோதலை வளர்க்கும் புல்லுருவிகளை அடியோடு ஒழிப்போம்!

கடந்த 1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கோஷ்டி மோதல்களும் கொத்து வெட்டுக்களும், கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளும் தலைவிரித்தாடத் தொடங்கியது யாவரும் அறிந்த விடயம்தான்

ஆனால், விடுதலைப் புலிகளின் குடாநாட்டு வருகைக்குப் பின்னர் அந்த அட்டகாசங்கள் - சீரழிவுகள் யாவும் ஓய்ந்துவிடும் - கட்டுப்படுத்தப்பட்டுவிடும் - என்றே அனைவரும் எதிர்பார்த்திருந்தார்கள்.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்தது போன்று கலாசாரச் சீரழிவுகளும் எமது தமிழ்த் தனித்துவத்தை கெடுக்கும் பண்பாட்டுச் சிதைவுகளும் முற்றாக ஒழிந்துவிடவில்லை ஒழிக்கப்படவுமில்லை என்பதே யதார்த்தம்.

இந்தச் சீரழிவு நடவடிக்கைகளில் பிரதானமாக இருந்துவருவது இளைஞர் குழுக்களுக்கிடையிலான கோஷ்டி மோதல்கள்தான்.

தென்பகுதியைப் போல கோஷ்டி மோதல் கலாசாரம் இங்கும் சர்வசாதாரணமாகிவிட்டது என்றுதான் கூறவேண்டும்.

ஆனால், அண்மையில் யாழ்நகரை அண்டிய ஐந்துசந்தியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சற்று வித்தியாசமானது - சாதாரண விடயமாக எடுத்துக்கொள்ளப்பட முடியாதது.

இரண்டு சமூகங்களைச் சேர்ந்த - அதாவது தமிழ் - முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த குழுக்கள் வாள்கள் - கத்திகள், பொல்லுகள் போன்ற ஆயுதங்கள் கொண்டு தாக்குதலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். ஒரு பகுதியின் சொத்துக்களை மறுபகுதியினர் கண்மூடித்தனமாக அடித்து நொறுக்கியிருக்கின்றார்கள். ரீவி, டெக் உட்பட பெறுமதிவாய்ந்த பொருள்கள் அடித்து தூளாக்கப்பட்டிருக்கின்றன. இரு குழுக்களையும் சேர்ந்த சுமார் 10 பேர் வரையில் படுகாயமடைந்திருக்கிறார்கள். நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் அப்பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கின்றது என்றால் இதன் பயங்கரத்தைப் பற்றி மேலும் கூறவேண்டிய அவசியமில்லை.

கொழும்பு போன்ற பகுதிகளில் இப்படியான இன மோதல்கள் இடம்பெறுவது சகஜமாக இருந்தாலும் தமிழர் தாயகப் பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் துளிர்விடத் தொடங்கியிருப்பதுதான் கவனிக்கப்படவேண்டியதாகும்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற இப்படியான ஒரு மோதல் சம்பவம்தான் பெரும் இன வன்செயலாகி கடை எரிப்பு, வெட்டுக்கொத்து ஹர்த்தால் என்ற வடிவங்களில் பரவத் தொடங்கியது. பின்னர் அங்கு சில தினங்களுக்கு ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்படும் வரைக்கும் வன்செயல்கள் தொடர்ந்தபடி இருந்தன.

அதே பாணியில்தான் இங்கும் ஐந்துசந்தியில் தமிழ் - முஸ்லிம் குழுக்களுக்கிடையிலான மோதல் சம்பவம் அரங்கேறியிருக்கின்றது.

மறுநாள் இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். பொலீஸ் நிலைய தலைமைப் பொலீஸ் அத்தியட்சகர் ஹெட்டர் தர்மசிறி ஆகியோர் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நேரடியாக சென்று இருதரப்பினரையும் சமரசம் செய்து - மோதலில இருதரப்புகளுக்கும் ஏற்பட்ட சொத்து இழப்புகளுக்கு தாமே நஷ்டஈடு வழங்குவதாக அமைச்சர் மகேஸ்வரன் உறுதியளிக்கும் வரைக்கும் முறுகல் நிலை தணிந்துவிடவில்லை. கிழக்கில் இன வன்முறை வெடித்தபோது அது தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையைக் குலைத்து சமாதான நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்குடன் இனவாதக் கட்சிகள் மேற்கொண்ட சதி முயற்சிதான் என்று பலதரப்பினராலும் கூறப்பட்டது.

**அற்புதன்**

அதேபோலத்தான் இப்பொழுது யாழ்நகரப் பகுதியில் இடம்பெற்றிருக்கின்ற இனமோதலும் சில தீயசக்திகளின் தூண்டுதல் என்று கூறலாம்

தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த முஸ்லிம்களுக்கு மதுபோதையில் வந்த நபரொருவர் இடையூறு விளைவித்ததாகவும் அதனைத் தொடர்ந்தே மோதல் வெடித்தது எனவும் கூறப்பட்டாலும் கூட அது நடந்தேறியிருக்கின்ற விதத்தைப் பார்க்கின்ற பொழுது அதற்கு பின்னால் நிச்சயமாக தீய சக்திகளின் தூண்டுதல்கள் - சதிவேலைகள் இருக்கின்றன என்றே கருத வேண்டியிருக்கின்றது.

கடந்த காலத்தில் இரு சமூகங்களுக்குமிடையில் ஏற்பட்ட கசப்புணர்வுகளை மறந்து, இருவரும் மதத்தால் வேறுபட்டவர்களேயன்றி மொழியால் ஒன்றுபட்டவர்கள் என்பதை உணர்ந்து சகோதர உணர்வுடன் ஐக்கியமாகியிருப்பது கண்டு பொறுக்க முடியாது அந்த ஒற்றுமையுணர்வை உடைப்பதற்கு திரைமறைவில் திட்டம் தீட்டும் துட்டர்களுக்கு எவரும் பலியாகிவிடக்கூடாது.

நீண்டகால இனப்போர் தணிந்து, சமாதான ஒளிக்கீற்றுக்கள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் மின்னிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் -

கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள், துன்பியல் சம்பவம் என்பதை தமிழர் தரப்பின் தலைமைப் பீடம் ஏற்றுக்கொண்டுவிட்ட தருணத்தில் -

வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் மட்டுமல்ல அது முஸ்லிம்களின் தாயகமும் கூட என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு இரு சமூகத்தவர்களும் ஒற்றுமையுடன் கைகோர்த்து பேரினவாதத்துக்கு எதிராக ஒருமித்து குரல் எழுப்ப திடசங்கற்பம் பூண்டுள்ள இந்த சூழ்நிலையில் -

**செய்திக்கட்டுரை**

இப்படியான விரும்பத்தகாத, இருதரப்பு ஒற்றுமையை சிதறடிக்கக்கூடிய சதித்திட்டங்களுக்கு இரு தரப்பும் பலியாகிவிடக்கூடாது.

நாம் இரு சமூகத்தவர்களும் சகோதரர்கள். எமக்குள் ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகள் - மனஸ்தாபங்களை பேசித்தீர்த்துக்கொள்வதை விடுத்து இவற்றுக்கெல்லாம். கத்தி பொல்லைக் கையில் எடுப்பது நல்லதல்ல.

அது எமது ஒற்றுமைக்கு மீண்டும் எப்போது - எப்படி தீமூட்டலாம் என்று தருணம் பார்த்துக் காத்திருப்பவர்களின் கையில் நாமே நெருப்புக் கொள்ளி எடுத்துக்கொடுப்பதற்கு ஒப்பாகிவிடும்.

அத்துடன், யாழ்ப்பாணத்தையும் கொழும்பு போன்ற வன்செயல் பிரதேசமாக்கி, இங்கும் கடைஎரிப்பு கத்திவெட்டு, கொலை, கொள்ளை போன்றவற்றை ஏற்படுத்திவிடாமல் பார்த்துக் கொள்வதும் இரு தரப்பினரதும் கடமையாகும்.

இந்த மோதல் சம்பவத்தை சாதாரண விடயம் தானே என்று கருதிவிட்டு சும்மா இருந்துவிடுவது புத்திசாலித்தனமானதல்ல. இதற்குப் பின்னணியில் நின்றுகொண்டு இன வன்முறைக் கலாசாரத்தை குடாநாட்டில் நிலைநிறுத்துவதற்கு திட்டமிட்டு செயலாற்றுகின்ற புல்லுருவிகளை கண்டுபிடித்து அவர்களை எமது சமூகத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டியது விடுதலைப் புலிகள் மற்றும் இன ஒருமைப்பாடு, சமூக நலன் என்பவற்றில் அக்கறை கொண்ட ஏனைய பொது அமைப்புகளின் உடனடிப் பணியாக இருக்கின்றது.

அந்தப் பணியை அவர்கள் காலந்தாழ்த்தாது செய்யமுன்வர வேண்டும்.

அத்துடன், தமிழ் - முஸ்லிம் மக்கள் அனைவரும் இது விடயத்தில் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

★

டோக்கியோவில் நடைபெறும்

# உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் ஐரோப்பிய யூனியனும் பங்குகொள்ளும்!

கொழும்பு,மார்ச்31

எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு ஐரோப்பிய யூனியனும் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இம்மாநாட்டில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ள அமெரிக்கா, ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளுடன் நான்காவதாக ஐரோப்பிய ஒன்றியமும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

இதன்மூலம் ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் 15 இற்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கையின் அபிவிருத்திக்கு உதவும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது, எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 20 வருட காலமாக நடைபெற்ற போருக்கு இப்பொழுது முடிவு எட்டப்பட்டு, சமாதான முயற்சிகள் தொடர்ந்து வருகின்றன. இத்தகைய முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையிலும், அபிவிருத்திக்கு உதவுவதற்கெனவும் -

ஐரோப்பிய யூனியன் முன்வந்துள்ளது என்று அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த உதவிவழங்கும் மாநாட்டை ஒட்டிய முதலாவது கூட்டம் எதிர்வரும 14 ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது.

அமெரிக்க பிரதி அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இலங்கையின் சார்பாக விஞ்ஞான தொழில்நுட்ப மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட கலந்துகொள்ளவுள்ளார்.

அடுத்த கூட்டம் ஜூன் மாதம் 6 ஆம திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. டோக்கியோ மாநாட்டில் எடுக்கப்படவேண்டிய முடிவுகள் குறித்து அதற்கு முன்னர் நடைபெறவுள்ள இரு கூட்டங்களிலும் ஆராயப்படவுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.(எ-4)

# ஈராக் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள தேயிலை உற்பத்தியாளருக்கு நிவாரணம்

கொழும்பு,மார்ச்31

ஈராக் போர் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள தாழ்நில தேயிலை உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தேயிலை உற்பத்தியாளர்களுக்கு 20கோடி ரூபாவை நிவாரணமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

செஸ் நிதியத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்படும். பெருந்தோட்ட, உட்கட்டமைப்பு அமைச்சும் தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதேவேளை, சமீபத்தில் நடைபெற்ற தேயிலை ஏல விற்பனையின் போது 55சதவீத தேயிலை விற்பனையாகவில்லை என தேயிலைத் தோட்ட உரிமையாளர் சங்கம் தெரிவித்தது.


வளைகுடா யுத்தம் காரணமாக தேயிலை விற்பனையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மேற்படி சங்கத்தின் செயலாளர் மலிக் குணதிலக்க தெரிவித்தார்.

(ஒ)

# கல்விச்சாலை காட்சிகள்



மாதகல் சென்.ஜோசவ் மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் வருகைதந்த பாடசாலைகள் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன், வித்தியாலய அதிபர் வி.சுப்பிரமணியம் மற்றும் விருந்தினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)



அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளை பிரதம விருந்தினரான வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஸ்ரீநிவாசன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் எஸ்.மகேஸ்வரதாசன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி சீ.விமலேந்திரன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-11)



நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலைக்கெனப் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு மைதானத்தை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நாடா வெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அரசரட்ணம், முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இரா.சின்னத்தம்பி, நெடுந்தீவு அரசியல்துறை உதவிப் பொறுப்பாளர் ஈழமாறன் மற்றும் விருந்தினர்கள் காணப்படுகின்றனர். (எ)



இனுவில் மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மா.சின்னத்தம்பி, சிறப்பு விருந்தினரான சித்தவைத்தியபீடத் தலைவர் திருமதி மிதிலைச் செல்வி ஸ்ரீகாந்தன் ஆகியோர், கல்லூரி அதிபர் துரைஎங்கரசு மற்றும் மாணவர்களால் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (எ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Ceynor பைபர் கிளாஸ் நீளம் 341/2' x101/2' அகலமான வள்ளம் விற்பனைக்குண்டு. எஞ்சின் யன்மார், 3 சிலிண்டர் S.M.3 மொடல், 45HP (Lord Hear) பயணிகள் லோஞ்சுக்கு உகந்தது. தொடர்பு: குஞ்சண்ணை, வேம்படி, வல்வெட்டித்துறை.(16158)

## திருமண சேவை

1969, ரோகினி, 8இல் செவ்வாய், B.Sc. மணமகனுக்கு வெளிநாடுகளில் Sponser உள்ள மணப்பெண் தேவை. உள்ளூர் மணப் பெண்களும விண்ணப்பிக்கலாம். மணமக்களின் தேவைகட்கு நாடுங்கள். துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (16154)

## இலக்கிய விமர்சனம்

தமிழில் உள்ள ஒரேயொரு நாடக விமர்சனநூல் 'கோடை' நாடகமும் 'நாகம்மாள்' நாவலும், 350 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. மாணவர்களும் ஆசிரியர்களும் பயனடையலாம். ரூபா40/-. (16129)

## மணமகள் தேவை

Phd படித்து வெளிநாட்டில் பணி புரிபவருக்கு MBBS படித்த மணமகள தேவை. தொடர்பு: விளம்பர இல. 1833, மே/பா உதயன். (16132)

## தவறிவிட்டது

17-03-2003 திங்கட்கிழமை இணுவில் சந்திக்கண்மையில் நிகழ்ந்த விபத்தின்போது விபத்திற்குளளான எனது மோட்டார் சைக்கிளிலிருந்த அதனைப் பதிவுசெய்வதற்கான ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ம.ஜெயகுலசிங்கம், மே/பா த.பாலசிங்கம், மஞ்சத்தடி, இணுவில் என்னும் முகவரியில் ஒப்படைக்ககவும். சன்மானம் வழங்கப்படும். (16157)

## கைமாறி விட்டது

28-03-03 வெள்ளிக்கிழமை கே.கே.எஸ். வீதியில் லுமாலா துவிசக்கர வண்டி ஒன்று மாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மாறி எடுத்தவர் எம்முடன் தொடர்புகொள்ளவும். P.வின்சன், நவாலி தெற்கு, கற்கேணியடி, மானிப்பாய். (16153)

## ஆண்டு நிறைவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,மார்ச்31

இணுவில் பொது நூலகத்தின் புனருத்தாரண ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பொது நூலகக் கட்டடத்தில் தலைவர் சொ. ஹரிஹரஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.செல்வவிநாயகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இணுவில் சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டி, கணனிப்பரீட்சை, மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், உதைபந்து மற்றும் கிரிக்கெட் ஆகியவற்றில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ-5)

# யு.என்.டி.பி. தகவல் மையம் விடுத்துள்ள வேண்டுகோள்

யாழ்.மாவட்டத்தில் எதிர்நோக்கப்படும் விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடைவளர்ப்பு போன்ற துறைகளின் பிரச்சினைகள் மற்றும் ஆய்வுத் தகவல்களை திருநெல்வேலியில் உள்ள விவசாய தகவல் மைய அலுவலகத்தில் கொடுத்து உதவுமாறு ஐ.நா.அபிவிருத்தி திட்ட நிறுவனம் கேட்டுள்ளது.

இந்தத் தகவல் மையம் கடந்த பெப்ரவரி மாதம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும்-

யாழ்.மாவட்டத்தில் உள்ள வளங்கள், தொழில் நுட்பத்திறன், கல்விசார் ஆராய்ச்சி, விவசாயம், கால்நடை, மீன் உற்பத்தி மற்றும் செயற்திறன் பற்றிய புள்ளி விவரங்களை இங்கு பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் -

அந்நிறுவன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகமும் ஐ.நா. அபிவிருத்தி திட்ட நிறுவனமும் இணைந்து இந்தத் தகவல் மையத்தை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-180)

# கோழிக்குஞ்சுகள் விநியோகம்!

அச்சுவேலி,மார்ச்31

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் உற்பத்தி செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள் ஏப்ரல் 9 ஆம் திகதி நீர்வேலி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

கோழிக்குஞ்சு தேவையான பண்ணையாளர்கள் முன் கூட்டியே கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி திருமதி செல்வவினிதா அறிவித்துள்ளார். (ஒ-11)

# கர்ப்பிணியின் உயிர்காத்த மருத்துவப் போராளி

கொழும்பு-முல்லைத் தீவு பேருந்துச் சேவையில் பயணம் செய்த கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு திலீபன் மருத்துவமனை வைத்திய போராளி ஒருவர் அவசர சிகிச்சை அளித்து தாயையும் சேயையும் காப்பாற்றினார்.

கொழும்பில் இருந்து முல்லைத் தீவு மாத்தளனுக்குச் சென்று கொண்டிருந்த பேருந்தில் கர்ப்பிணிப் பெண் ஒருவரும் பயணம் செய்தார்.

நயினாமடுவுக்கும் குளவி சுட்டானுக்கும் இடையில் பேருந்து சென்று கொண்டிருந்த சமயம் பிரசவ வலி ஏற்பட்டு அப்பெண் துடியாத்துடித்தார்.

அதிர்ஷ்டவசமாக அந்தப் பேருந்தில் பயணம் செய்த தியாகதீபம் தீலிபன் மருத்துவமனைப் போராளியான தில்லைநம்பி என்பவரும் அப்பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தார்.

வலியால் துடிக்கும் கர்ப்பிணிப் பெண்ணின் நிலையை அப்போராளி உணர்ந்து கொண்டார். மருத்துவ உபகரணங்கள் இல்லாதபோதும் உயிரைக் காக்கும் பணியில் உடனடியாக ஈடுபட்டார். அந்த மருத்துவப் போராளி. அவரது சமயோசித சிகிச்சையால் அப்பெண்ணுக்கு சுகப் பிரசவமானது. (ஒ-3)

## 8ஆவது வருட நினைவஞ்சலி





அமரர் க.குமரேசு — திருமதி கு.தங்கம்மா

10.09.1903 ← தோற்றம் → 06.06.1908

29.03.1995 ← மறைவு → 06.04.1995


*திதி: 31-03-2003*

**அன்புக்கோர் அணிகலனாய் அவனிதனில் வாழ்ந்தீர்கள்**
**இன்று உம் நினைவால் நெஞ்சம் உருகுகின்றோம்**
**நீங்கள் மறைந்து போனாலும் உங்கள் நினைவுகள்**
**எங்கள் நெஞ்சங்களை விட்டு ஒரு போதும் மறையாது!**

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
~ குமரேஷ் வாணிப நிலையம்.

*தும்பளை மேற்கு,*
*பருத்தித்துறை.*

(C-27057)



Babi mild
Natural 'N Mild
From Nature
to your baby
இயற்கையின் வரப்பிரசாதம்
உங்கள் குழந்தைகளுக்கு
குழந்தைகளின்
சருமத்துக்கு மென்மையான
பாதுகாப்பைத் தருபவை.
சந்தைப்படுத்துவோர்:
HARCOURTS(PRIVATE)LTD.
No.14, Station Road, Dehiwala.
யாழ்.முகவர்:
JEGHAN PHYARMACY
ஜெகன் பார்மஸி
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021- 2222194
(C/27062)


## கெருடாவில் பகுதியில் உள்ள

# மக்கள் குடியிருக்காத வீடுகளில் கற்கள், மரங்கள் அபகரிப்பு!

தென்மராட்சி, மார்ச் 31

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் மக்கள் குடியிருக்காத வீடுகளை அப்பகுதியைச் சேர்ந்த சிலர் உடைத்துக் கற்களை அப்புறப்படுத்தினர். அப்பகுதிக் காணிகளில் உள்ள மரங்களையும் தறித்துச் செல்வதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு அத்துமீறிச் செயற்படுபவர்களை வீடுகளின் உரிமையாளர்கள தடுக்க முயன்ற வேளையில் பைகளில வைத்துள்ள மதிவெடிகளைக் காட்டி இனிமேல் இப்பகுதிக்கு வந்தால் கால்களை இழக்க வேண்டி வருமென அவர்கள் பயமுறுத்துவதாகவும் -

இவர்களின் அடாவடித்தனத்தினால் தமது வீடுகளை காணிகளைத் துப்புரவு செய்வதற்குக்கூடப் பொதுமக்கள் செல்ல முடியவில்லை எனவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்
1933 - 11 - 03



இறைவன் அடியில்
2003 - 03 - 02

### அமரர் மாணிக்கம் சரஸ்வதி

நாளை (01.04.2003) செவ்வாய்க்கிழமை பெற்றக்கணாவத்தை அல்வாய் வடக்கு, அல்வாய் எனும அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் சபிண்டிகரண, மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*பெற்றிக்கணாவத்தை*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*

(16160)

## துயர் பகிர்கின்றோம்



27-3-2003 அன்று காலமான
நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
(றொபேட்)
அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்.....

(16155) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(றொபேட்)

கரம்பனைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட N.அந்தோனிப்பிள்ளை(றொபேட்) 27.03.2003 அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01-04-2003) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பிற்பகல் 4.00மணியளவில் ஊர்காவற்றுறை புனித மரியாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் ஊர்காவற்றுறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி A.அக்கினஸ் இராசம்மா (மனைவி)
பிள்ளைகளும்
கரம்பன் கிழக்கு, ஆஸ்பத்திரி வீதி,
ஊர்காவற்றுறை

66, அலெக்ஸ் வீதி,
நீர்கொழும்பு.

(16156)

### திருமதி தங்கம்மா இரத்தினம்

*(வைமன் றோட், நல்லூர்)*

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வைமன் றோட் நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது சொய்சாபுரம் மொறட்டுவையில் வசித்தவருமாகிய திருமதி தங்கம்மா இரத்தினம் 29.03.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் சிவசுப்பிரமணியத்தின் அன்புத் தாயாரும் கௌசலாதேவியின் அன்பு மாமியாரும் பிரதீஸ்வரன்(P.I.L.Singapore), பிரதீபன் (P.I.L.Singapore), பிரமேகலன (P.I.L. Singapore), பிரமேஸ் (U.K.), நாகவதனி (India) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான முத்தம்மா (ஊரெழு), பூரணம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.03.2003) திங்கட்கிழமை காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்
T.P. : 605443

MR.S.SIVASUBRAMANIAM
C 32, 2/2 SOYOSA PURA FLATS,
MORATUWA.

(16152)


# புதுமை புரியும் ஆர்வத்தினால் உருவாக்கப்பட்ட சைக்கிள்!

இணுவில் கிழக்கு காரைக்காலைச் சேர்ந்த இரு சகோதரர்கள் இணைந்து சைக்கிள்களின் பழைய உதிரிப்பாகங்களை இணைத்து புது வடிவத்தில் சைக்கிள் ஒன்றை உருவாக்கியுள்ளனர். சைக்கிள் திருத்தும் கடை ஒன்றினை நடத்திவரும் இவர்கள் இருவரும் தமது வேலை நேரம் தவிர்ந்த ஓய்வு நேரத்தில் தமது சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

20வயதுடைய கிருஷ்ணபிள்ளை இராசகுமார் (சிறி) என்பவரும் அவரது தம்பியாரான கிருஷ்ணபிள்ளை பிறேமன் (வயது 12) என்ற சிறுவனுமே இந்த புதிய சைக்கிளை உருவாக்கியவர்கள். சிறுவர்களுக்கான சைக்கிள் மற்றும் பெரிய சைக்கிள் ஆகியவற்றின் சில உதிரிப்பாகங்களை இணைத்து ஒட்டி தயாரித்துள்ள இந்தச சைக்கிளின் உயரம் சுமார் 6அடிக்கு மேல்.

இந்தச் சைக்கிளில் ஏறுவதும் இறங்குவதும் மிகவும் சுவாரஸ்யமான விடயம். அதாவது சைக்கிளை உருட்டியவாறு மிதியில் கால் வைத்து ஏறி இருக்கையில் அமர்ந்து கொண்டு ஓட வேண்டும். கால் ஊன்றி இறங்க முடியாது. (அவ்வளவு உயரம்) நிறுத்துவதானால் இருக்கையில் இருந்து இறங்கி சடுதியாக கீழே குதிக்க வேண்டும்.

இது குறித்து இதனை உருவாக்கிய இராசகுமார் (சிறி) கூறும்போது "வித்தியாசமாக எதையாவது உருவாக்கவேண்டும் என்ற சிந்தனையுடனேயே இந்த முயற்சியை தொடங்கினேன்." அது வெற்றிகரமாக அமைந்து விட்டது. பலர் எனது முயற்சிக்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். அது இனி மேலும் மேலும் புதிதாக எதையாவது உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்குள் ஏற்படுத்துகிறது" - என்றார். (ஒ-4)



இதுவும் சைக்கிள்தானா...

# உயர்தர வகுப்பில் தாம் கற்கும் பாடங்களை மாணவரே சுயமாகத் தெரிவுசெய்யவேண்டும்!

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை எழுதிவிட்டு முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் இளம் மாணவச் செல்வங்கள் தனியார் கல்வி நிலைய விளம்பரங்களைக் கண்டு மீண்டும் அலுத்துக் கொள்வது எமக்குக் கேட்கிறது. 'கல்வி இளமையில் அன்றி முதுமையில் வரா' என்ற முதுமொழிக்கிணங்க தொடர்ந்து ஜி.சீ.ஈ. உயர்தரம் படிக்க வேண்டிய தேவை உங்களுக்குண்டு. பெற்றோர் தம் பிள்ளைகள் பட்டதாரிகளாக வரவேண்டும் என்ற ஆர்வத்தினால் தூண்டப் பெற்று உயர்தரம் படிக்க அனுப்புகின்றனர்.

உயர்தரம் என்னும் போது கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் என நான்கு துறைகள் காணப்படுகின்றன. இந்நான்கு துறைகளிலும் எத்துறையைத் தேர்வு செய்வது என்ற ஆதங்கம் உங்கள் மனதில் வெளிப்படும். பெற்றோரும் தம்பிள்ளை ஒரு வைத்தியனாக - ஒரு பொறியியலாளனாக வர வேண்டும் என்ற பேராவலால் பிள்ளைகள் மீது அதிக அழுதத்தைப் பிரயோகித்து அத்துறையில பிரவேசிக்கச் செய்கின்றனர்.

ஆனால், அம்மாணவனின் விருப்பு, வெறுப்பு அங்கு மழுங்கடிக்கப்படுகின்றது. அவனது சுயஆற்றல் வெளிப்படாமல் போகின்றது. அவன் சில சமயங்களில் சம்பந்தப்பட்ட பரீட்சையில் தோல்வியைத் தழுவுகின்றான். இப்போது மாணவனின் உள்ளம் பாதிப்படைவதோடு, பெற்றோரும் அவனைக் கற்பித்த ஆசிரியரும் கூட மனவேதனைக்குட்பட நேரிடுகின்றது. இத்தகைய நிலை தவிர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.

உயர்தரம் கற்கச் செல்லும் மாணவனின் திறமையை முதலில் அறிதல் வேண்டும். அதாவது ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் அவனது நிலை என்ன? என்பதை ஆராய்ந்த பின் மாணவனது சுயவிருப்புக்கு இடமளித்தல் வேண்டும். அவன் சில வேளைகளில் நண்பர்களின் உந்துதலுக்கு உட்பட்டுத் தவறான திசையில் திரும்பாதிருக்குமாறு பெற்றோர் கவனித்துக் கொள்ளுதல் அவசியமானதாகும். இந்த இடத்தில் பெற்றோர் தம் பிள்ளையுடன் ஒரு நல்லாசிரியரிடத்தில் சென்று (முன்னர் இம் மாணவனுக்குக் கற்பித்த ஆசிரியராயின் பயன் பன்மடங்காகும்) கலந்தாலோசித்து முடிவு எடுத்தல் வேண்டும். இதில் மாணவர் விருப்பம் 50%, ஆசிரியர் அறிவுரை 25%, பெற்றோர் தெரிவு 25%மாக இருக்குமாயின் விரும்பத்தக்கது.

சில பெற்றோர் தம்பிள்ளை எதை விரும்புகிறானோ, அதைப் படிக்கட்டும என அலட்சியமாயிருத்தல் பெருந்தீங்கு விளைவிப்பதாகும். பொதுவாக யாழ்ப்பாணத்துக் கல்விச் சமுதாயத்தில் போட்டி என்பது மிகவும் வலுத்துள்ள நிலையில் தம்பிள்ளைகளைக் பலிக்கடாக்களாக மாற்றும் பெற்றோர்கள் பற்றி நான் மிகவும் மனவேதனைப் படுகின்றேன்.

**க.க.ஈஸ்வரன்**
**மட்டுவில்.**

அக்கரைக்கு இக்கரை பச்சை என்பதே கல்வியின் நிலை. எல்லாப் பாடமும் கற்பதற்காகவே. அதில் ஏற்றத் தாழ்வை நாம் வளர்த்து விடுவது சமூக விரோதச் செயல் எனலாம். 'கல்வியையும் வாழ்க்கையையும் ஆக்கமலர்ச்சிச் செயற்பாடாக மாற்ற வேண்டும்' எனவும், 'தன்முனைப்புக் கற்றலின் நம்பிக்கையை வளர்க்க வேண்டும்' எனவும் பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள் கூறிய கருத்தை இவ்விடத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

ஆசிரியர்களிடம் சென்று ஒரு மாணவன் தான் கற்கத் தெரிவுசெய்யும் பாடம் பற்றி ஆலோசிக்கும் போது ஆசிரியர் அந்த மாணவனை அறிவின் முன்னரங்கை நோக்கி நகர்த்துவதற்கான ஆலோசனைகளை வழங்குவது இங்கு முக்கியமானதாகும். மாணவனது தனிப்பட்ட ஆற்றல்களை, விருப்பங்களை துறைபோகும் அம்சங்களை ஆசிரியர் நன்கு அறிந்து வைத்திருப்பதால் மாணவனை வழிப்படுத்தும் பெரும்பாங்கை ஆசிரியர் பெறுகின்றார். எந்தவோர் ஆசிரியரும் மாணவனைத் தவறான திசைக்கு இட்டுச் சென்றதாக வரலாறு கூறவில்லை. எனவே, ஆசிரியரின் வழிப்படுத்தலின்படி மாணவன் நடந்து கொள்ளல் பெரும் பயனளிக்கும் என்றால் மிகையில்லை.

அடுத்து உயர்தரத்தில் கற்பிக்கப்படும் பாடங்களின் உயர்வு, தாழ்வு கற்பிப்பது சிலரின் பொழுது போக்கு. எந்தவொரு உயர்தர மாணவனையும பார்த்து பிறர் வினவுவது 'என்ன தம்பி விஞ்ஞானமே படிக்கிறாய்? அதற்கு இல்லை நான் 'ஆட்ஸ்' படிக்கிறேன் என்று பதில் வரும். அத்தகைய மாணவனின் மனதில் ஓர் ஏக்கம் கலந்திருப்பதையும் வினவியரின் முகத்தில் ஓர் ஏளனச் சுளிப்புக் காணப்படுவதையும் நாம் காணும்போது மேலும் வேதனை மிகுந்துவிடுகின்றது.

எனவே, எல்லோருக்கும் தத்தம் தொழில் உயர்ந்ததே என்பது போல யார் எந்தப் பாடத்தைத் தெரிவுசெய்தாலும் அந்தப் பாடம் உயர்ந்ததே. கலைத்துறை மாணவனும் படித்துத் தான் சித்தி பெறவேண்டும். விஞ்ஞானத்துறை மாணவனும் படித்துத்தான சித்தி பெறவேண்டும். எனவே, ஏற்றத் தாழ்வுகளை மறப்போம். ஏமாற்றங்களைத் தவிர்ப்போம். எமக்குத் துணை போகும் பாடத்தைத் தெரிந்தெடுப்போம். வெற்றி பெறுவோம். ★


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3527304 இருந்து
3544969 வரை
சீட்டிழுப்பு இல. 1388
திகதி 29.03.2003

வெற்றி எண்கள் 03 06 28 32 42
போனஸ் எண் 25

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 110 | 10,000/- | 1,100,000/- |
| 3 | 5,668 | 500/- | 2,834,000/- |
| 2 | 83,275 | 20/- | 1,865,500/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 113,802 | 10/- | 1,138,020/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,137,520/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா.2,380,500/-

தொடர் இல. 2549558க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 02ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3532993-1-20
3535546-5-08
3528909-6-45
3542548-5-29
3542157-1-66

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 461 |
| திகதி | 28.03.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5826043-5840461

வெற்றி இலக்கங்கள் 02 07 22 51

லக்கினம்
சிங்கம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,708,850/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 317,503 | 10 | 3,175,030 |
| 2 இலக்கங்கள் | 29,077 | 20 | 581,540 |
| 1 இல + லக்கினம் | 28,818 | 30 | 864,540 |
| 2 இல + லக்கினம் | 2,704 | 100 | 270,400 |
| 3 இலக்கங்கள் | 771 | 500 | 385,500 |
| 3 இல + லக்கினம் | 72 | 5,000 | 360,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 378,949 | - | 6,037,010 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,037,010/-

தொடர் இல. 4848226க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 01ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

5830766-3-73
5835134-4-97
5838778-7-40
5830173-7-24
5835536-4-37

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# சுயநிர்ணய உரிமை மற்றும் வாழ்வு விடுதலை இயக்கம் மூலமே கிட்டும்

தமிழரசுக் கட்சியின் பிதாமகன் அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 105ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு, 1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி கந்தரோடையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை இங்கு மீள் பிரசுரமாகிறது.

இனத்தின் சுயநிர்ணய உரிமையைப் பெறத் தனிப்பட்டவர்களாலோ அவர்களுடைய தலைமையினாலோ ஒரு போதும் முடியாது. எந்த நாட்டினை எடுத்துக்கொண்டாலும் சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு கொண்டு வெற்றியீட்டியது ஓர் இயக்கமேயன்றித் தனிப்பட்ட தலைவர்களல்ல. இந்த அநுபவ உண்மையை மனத்திலிருத்தித்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் பேசுமினத்தின் உரிமையைப் பெறவும் பாதுகாக்கவும் இடையறாது போராடி வருகின்றது.

பாரத நாட்டின் விடுதலைப் போரில் மகிமை பொருந்திய மாபெருந் தலைவர்கள் பங்கு கொண்டபோதும் "இந்திய தேசிய காங்கிரஸ்" என்ற இயக்கமே விடுதலையை ஈட்டித்தந்தது. இந்த உண்மையை - அனுபவப் படிப்பினையை - மறக்காமல் தமிழ் பேசுமினம் தனது சுயநிர்ணய உரிமையைப் பெற தமிழரசு இயக்கத்திற்கு அமோக ஆதரவளிக்க வேண்டும்.

### தலைவர்கள் மறையலாம் கொள்கை மறையாது!

ஓர் இயக்கத்தின் தலைவர்களாக விளங்குபவர்கள் ஒரு கால கட்டத்தில் கொள்கை பிறழ்ந்தோ அல்லது இறப்பினால் மறைந்தோ, அரசியலைத் துறந்தோ போகலாம். ஆனால், அந்த விடுதலை இயக்கம் தடைப்பட வேண்டும் என்ற நியதி கிடையாது. தமிழரசுத் தலைவர்கள் மாறலாம்;



மறையலாம். ஆனால் தமிழரசு இயக்கம் தன் புனித இலட்சியங்களுக்கான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. தேர்தலில் போட்டியிடுவது எங்கள் போராட்டத்தின் ஓர் அங்கமே தவிர முழுப் போராட்டமும் அதுவல்ல. எனினும், தமிழ் பேசும் மக்கள் கடந்த பத்தாண்டுகளாக நாம் நடத்திவரும் இன விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருமாறு கட்டளையிடுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அன்றும் இன்றும் எமது கட்சியின் இலட்சியமும் அதுவேதான்.



கொழும்பில் இடம்பெற்ற சமாதானக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சம்பியனாகிய கொழும்பு றோயல் கல்லூரி அணித்தலைவர் வேலு அருண்பிரகாஷுக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா ஞானப்பிரகாசம், யாழ். மத்திய கல்லூரி அதிபர் கே.இராசதுரை, சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ். தனபாலன் ஆகியோர் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதை படத்தில் காணலாம்.


## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

இடம்:- புதிய உயர் கல்லூரி புத்தகசாலை
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
காலம்:- 31.03.2003 - 05.04.2003
(காலை 8 மணி – 5 மணிவரை)

குறிப்பு:- இந்தியப் பல்கலைக்கழக வெளியீடுகள், அறிவியற் களஞ்சியம், வாழ்வியற் களஞ்சியம் என்பவற்றோடு பல்துறை சார்ந்த நூல்கள் விஷேட கழிவுகளுடன் மாணவர்களுக்கு வழங்கப்படும். (16168)



## விற்பனைக்கு வந்துவிட்டது

விவசாயத்திற்கேற்ற சகல உர வகைகளான அமோனியா T.D.M, V-MIX, M.O.P வகைகளும், யூரியாவும் (போர) விற்பனைக்குள்ளது.

யூரியா விலை - 925/-

தொடர்பு : M.L & Co.
235, 237, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No.: 222 2506
(16167)


## ஈர விழிகளில் ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி கணபதிப்பிள்ளை பாக்கியம்

மண்ணில் : 04.06.1929
விண்ணில் : 11.04.2002

(திதி: 31.03.2003)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை
எம் சோகம் உங்கள் பாசம் நிழலாகும் வரை
ஆறாது எம் சோகம்.

*உரும்பிராய் கிழக்கு,*
*சுன்னாகம்.*
(16166)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# கண்காட்சிக் கிரிக்கெட் போட்டியில் இலங்கையை இந்தியாவென்றது!

மும்பை,மார்ச்31

இலங்கை அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான கிரிக்கெட் கண்காட்சி ஆட்டத்தில் இந்திய அணி 124 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பிரபல இந்திப் பின்னணிப் பாடகியான லதா மங்கேஷ்கரின் தந்தை தினநாத் மங்கேஷ்கர் ஞாபகார்த்த மருத்துவமனைக்கு நிதி திரட்டும் வகையில் நேற்றுமுன்தினம் மும்பையில் இவ்வாட்டம் நடைபெற்றது.

இந்தியத் தெரிவு அணிக்கு கங்குலியும், இலங்கைத் தெரிவு அணிக்கு முன்னாள் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்காவும் தலைமை தாங்கினர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பம் முதல் அதிரடியாக ஆடி நிர்ணயிக்கப்பட்ட 45 ஓவர்களில் 294 ஓட்டங்களைக் குவித்தது. இந்திய அணியின் தினேஷ் மொங்கியா சிறப்பாக ஆடி108 பந்துகளைச் சந்தித்து ஆட்டமிழக்காமல் 116 ஓட்டங்களை விளாசினார். இதில் ஒரு சிக்ஸரும், 10 பௌண்டரிகளும் அடக்கம்.

இலங்கைப் பந்துவீச்சாளர்களில் நுவன் சொய்ஸா 55 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். எரிக் உபசாந்த, அசங்ககுரிசிங்க, முரளிதரன், ஜெயசூரியா மற்றும் ரஸல் ஆர்னல்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

295 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கைஅணி, இந்திய அணியின் பந்து வீச்சின் முன் திணறியது. இறுதியில் 35.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை மட்டுமே இலங்கை அணி பெற்றது. இதனால், இந்தியா 124 ஓட்டங்கள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றது.

இலங்கை அணி சார்பாக ரொஷான மஹநாம 43 ஓட்டங்களையும், உப்புல் சந்தன 39 ஓட்டங்களையும், குருசிங்க 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய பந்துவீச்சாளர்களில் ஷஹீர்கான் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சஞ்சய் பங்கர், யுவராஜ் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தினேஷ் மொங்கியா ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். அவருக்குப் பரிசாக வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா பணத்தையும் வைத்தியசாலை நிதிக்குக் கொடுத்துவிட்டார்.

இப்போட்டியின் மூலம் சுமார் 1.75 கோடி இந்திய ரூபா நிதி திரட்டப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-5)

## சங்கானை ஆலயத்தில் யந்திரத் தகடு திருட்டு

சங்கானை,மார்ச்31

சங்கானை பிரதான வீதியில் அமைந்துள்ள கூடத்து மனோன்மணி அம்மன் ஆலயத்தின் மூலஸ்தான ஓட்டைக் கழற்றி உள்நுழைந்த திருடர்கள் அம்மன் சிலையைப் பெயர்த்துவிட்டு அதன் கீழ் வைக்கப்பட்டிருந்த ஐம்பொன்னினாலான யந்திரத் தகட்டினைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. திருட்டுச் சம்பவம் குறித்து ஆலய நிர்வாகத்தினர் சங்கானைப் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (எ-29)

## கிளிநொச்சியில் வேவு விமானம்

கிளிநொச்சி,மார்ச்30

விமானப்படையின் வேவு விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் காலை 10 மணிமுதல் 10.30 மணிவரை கிளிநொச்சிப்பகுதியில் தாழ்வாகப் பறந்து வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது. (ம-3-12)

## தந்தை செல்வாவின் 105 ஆவது பிறந்ததின நினைவுகூரல் வழிபாடு

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தினால் நடத்தப்படும் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 105ஆவது பிறந்ததின நினைவுகூரல் வழிபாடு இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு சுண்டுக்குளி சென்.ஜோன்ஸ் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இறைச் செய்தியை யாழ். மறைக் கோட்ட முதல்வர் அருட்தந்தை மைக்கல் சௌந்தரநாயகம் வழங்குவார். நினைவுரையை சி.வீ.கே. சிவஞானம் நிகழ்த்துவார். (எ-5)

## நூல் வெளியீட ஏற்பாடு

அராலி,மார்ச்31

அராலி மத்தியைச் சேர்ந்த எழுத்தாளர் அருள்நெறிச்செல்வர் வி.செல்வரத்தினம் "இந்து மதத்தின் பெருமையும், தத்துவங்களும், கோட்பாடுகளும்" என்ற நூலை விரைவில் வெளியிடவுள்ளார்.

மேற்படி நூல் வெளியீட்டுவிழா விரைவில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஏ-14)


## இயந்திரம் விற்பனைக்கு உண்டு

3 PH மரவேலை புதிய இயந்திரமும், 8 HP METEX டீசல் இயந்திரமும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
K.S.சந்திரசேகரம்
*கண்டி வீதி,*
*மீசாலைச் சந்தி, மீசாலை.*
(16128)


# இரட்டை விக்கெட் கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் நடக்கும்

தலா இருவர் கொண்ட அணிகள் பங்குபற்றும் இரட்டை விக்கெட் கிரிக்கெட் உலகக் கிண்ணச் சாம்பியன சுற்றுப்போட்டி எதிர்வரும் ஏப்ரல் 4 தொடக்கம் 6 ஆம் திகதி வரை மேற்கிந்தியத் தீவுகளின் சென். லூசியா நகரில் நடைபெறவிருக்கிறது.

8 டெஸ்ட் அணிகளிலிருந்தும் தலா இரு சகலதுறை வீரர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சார்பில் அரவிந்த டி சில்வா, மஹேல ஜயவர்த்தன ஆகியோர் இவ்வாட்டங்களில் பங்குபற்றவுள்ளனர்.

8 அணிகளும் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஆரம்ச் சுற்று ஆட்டங்கள் நடைபெறும். முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்கு தெரிவு செய்யப்படும்.

முதல் சுற்று ஆட்டங்களில் ஒவ்வோர் அணியும் தலா 8 ஓவர்கள் துடுப்பெடுத்தாடவுள்ளன. இரு வீரர்களும் தலா 4 ஓவர்கள் பந்துவீச வேண்டும்.

துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டமிழந்தால் அவர் களத்தை விட்டு அகலமாட்டார். பதிலாக அணியின் 10 ஓட்டங்கள் குறைக்கப்படும்.

களத்தடுப்பில் ஈடுபடுவதற்கு ஒவ்வோர் அணிக்கும் ஒரு விக்கெட் காப்பாளரும் 8 களத்தடுப்பாளர்களும போட்டி ஏற்பாட்டாளர்களால் நியமிக்கப்படுவர். இதற்காக இரு விக்கெட் காப்பாளர்கள் உட்பட 18 பேர் கொண்ட களத்தடுப்பு குழாமொன்று நியமிக்கப்படவுள்ளது.

இத்தொடரின் அரையிறுதி ஆட்டங்களில் 10 ஓவர்களும் இறுதி ஆட்டங்களில் 12 ஓவர்களும் ஒவ்வோர் அணியும் துடுப்பெடுத்தாடவுள்ளன.

சுற்று ஆட்டங்களில் சம்பியனாகும் அணிக்கு 65,000 டொலர் (சுமார் 65 லட்ச ரூபா) பணப்பரிசு வழங்கப்படும். இரண்டாமிடம் பெறும் அணிக்கு சுமார் 30 லட்ச ரூபாவும் அரையிறுதியில் தோல்வியுறும் அணிகளுக்கு 20 லட்ச ரூபாவும் வழங்கப்படவுள்ளன. ஏனைய நான்கு அணிகளுக்கும் தலா 10 லட்ச ரூபா வழங்கப்படவுள்ளன. அணியின் சிறப்பாட்டக்காரருக்கு சேர் கார்பீல்ட் சோபர்ஸ் கிண்ணம் வழங்கப்படவுள்ளது.

அணிகள் விவரம் :

குழு 1 : மேற்கிந்தியத் தீவுகள், ஸிம்பாப்வே, இங்கிலாந்து.

குழு 2 : ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இலங்கை, நியூஸிலாந்து.(5)

# மரடோனாவின் மனைவி விவாகரத்து கோரி மனு

ஆர்ஜென்ரீன உதைபந்தாட்ட அணியின் முன்னாள் தலைவர் டியகோ மரடோனாவின் மனைவி கிளாடியா வில்லபேஃனே விவாகரத்து கோரி விண்ணப்பித்துள்ளார்.

மரடோனாவுக்குப் கிளாடியாவுக்கும் திருமணம் நடந்து 14 ஆண்டுகள் ஆகின்றன. இவர்களுக்கு டால்மா, கியானியா என இரு மகள்களும் உள்ளனர்.

விவாகரத்து குறித்து கிளாடியாவின் தந்தை கோகா கூறுகையில்:-

சில காலமாகவே இப்பிரச்சினை இருந்து வருகிறது. கிளாடியா சட்டபூர்வமாக விவாகரத்துக் கோருவதற்கான நடவடிக்கை கடந்த 7 ஆம் திகதியே மேற்கொண்டுவிட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதில் 2 மகள்களையும் தன்வசமே ஒப்படைக்குமாறு அவர் கூறியுள்ளார் என கோகா தெரிவித்துள்ளார்.

42 வயதாகும் மரடோனா போதை மருந்து அடிமையில் இருந்து மீளுவதற்காக கடந்த 3 ஆண்டுகளாக கியூபாவில் சிகிச்சை பெற்றுவருகிறார். (ஒ)

## மரண அறிவித்தல்

### கந்தையா இராஜதுரை

திருநெல்வேலி, அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராஜதுரை (முன்னாள் அரச மரவேலைக் கூட்டுத்தாபன முகாமையாளர், சுன்னாகம்) அவர்கள் 28.03.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதிகளின அருமை மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் ஜெயந்தன் (பிரான்ஸ்), முகுந்தன்(ஓமான்), ஜெயலட்சுமி, பிரபாகரன்(தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஜெயகௌரி, கருணாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பவளம், பாக்கியம், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் நல்லம்மா, கமலாம்பாள், லோகாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலவதனம்(பிரான்ஸ்), கௌரி(ஆசிரிய ஆலோசகர்,யாழ் கோட்டம்), உதயரட்ணம், யோகேஸ்வரி, கிருஸ்ணமூர்த்தி(ஆசிரியர், யாழ். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), துர்க்கா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கார்த்திகா(பிரான்ஸ்), கீர்த்திகா(பிரான்ஸ்), பிரியங்கா (பிரான்ஸ்), கேதாரன், சங்கீர்த்தன், அபர்ணா, யதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2003) திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.பிரபாகரன் (பிரான்) மகன்,
க.கிருஸ்ணமூர்த்தி
(ஆசிரியர், யாழ். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) (மருமகன்),
V.T.இராஜேந்திரா
(இலங்கை வங்கி - கொழும்பு) (மருமகன்),
ஸ்தபதி சி.அமரசிங்கம்
(மைத்துனர்).

*அம்மன் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

(16163)

# சதாமுக்கு அன்று கைகொடுத்த சி.ஐ.ஏ. இன்று அவரிடம் அடிவாங்கும் நிலைமை



ஆனானப்பட்ட அமெரிக்காவையே கலந்து பார் எனக் கூறும் சதாம் ஹுஸைன் எவ்வளவு பெரிய ஆளாக இருக்க வேண்டும்? சதாம் ஹுஸைனின் இன்னொரு கதை உங்களுக்குத் தெரிந்தால் நிச்சயம் வெலவெலத்துப் போவீர்கள்! இன்றைய தேதியில் உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான முஸ்லிம் இளைஞர்களுக்கு சதாம் ஹுஸைன் ஓர் ஒப்பற்ற ஹீரோவாகத்தான் திகழ்கிறார்.

எதைக் கண்டும் அஞ்சாத அவரது தைரியம், எப்பேர்ப்பட்ட ஏகாதிபத்யமாக இருந்தாலும் கொஞ்சமும் மண்டியிடாத துணிவு ஆகியன சதாம் ஹுஸைனை தங்கள் தலைவராக ஏற்றுக் கொள்ளச் செய்திருக்கின்றன. யார் இந்த ஹுஸைன்? பிறவியிலேயே அப்பேர்பட்ட தைரியசாலியா? ஆமாம்! ஈராக்கில் உள்ள அல் ஆவ்ஜா என்ற சின்னஞ்சிறு கிராமத்தில்தான் சதாம் ஹுஸைன் பிறந்தார் வளர்ந்தார். ஏழ்மை நிறைந்த குடும்பத்தில் சதாம் ஹுஸைனுக்கு படிப்பும் ஏறவில்லை. ஆனால் ஒரு விஷயத்தில் அவர் தெளிவாக இருந்தார். எங்கிருந்தாவது ஆடு, கோழி, முட்டை என திருடிக் கொண்டு வந்து, குடும்ப பசியை துடைத்து விடுவார். இது அவ்வளவுக்கு எதிரான செயல் என்று பெற்றோர் சொன்னால், 'செய்யச் சொன்னதே அவர்தான்' என்றார் பதிலுக்கு! சிறு வயதிலேயே சதாம் ஹுஸைனிடம் தலைவர் பாணி விஷயங்கள் நிறைய குடிகொண்டிருந்தன. ரஷ்யாவின் ஸ்டாலின்தான் சதாம் ஹுஸைனின் நிதர்சன ஹீரோ. பள்ளி நண்பர்களிடம் அதிகம் ஸ்டாலின் பற்றித் தான் பேசுவார்.

வளர்ந்தவர். பள்ளி காலத்திலேயே ரகசியமாக துப்பாக்கி சுடும் பயிற்சியில் தேர்ச்சிபெற்றவரான சதாம் ஹுஸைன் வீட்டை விட்டு பாக்தாத் வந்து பாத் கட்சி அலுவலகப் பையனாக வேலைக்குச் சேர்ந்தார். இன்றைய பாத் கட்சியின் தலைவரே சதாம் ஹுஸைன் தான்! சதாம் ஹுஸைனின் வேகமான செயற்பாடுகளும், மனத்துணிவும் அந்தக்கால அரசியல்வாதிகளுக்கு மிகவும் பிடித்துப் போயின. பல முக்கிய தலைவர்களுக்கு ரகசிய ஆளே சதாம் ஹுஸைன்தான்! அவர்களின் திட்டப்படி ஆளும் கட்சி அதிபரான காசிமை கொல்ல புறப்பட்டார் ஒரு நாள். ஆனால், அவரது திட்டம் தோற்று விட, யாருக்கும் தெரியாமல் சதாம் தப்பி ஓடி எகிப்தில் தஞ்சமானார். இன்றைக்கு எந்த அமெரிக்கா சதாமை ஒழிக்க அலைகிறதோ அதே அமெரிக்காதான் சதாமுக்கு வாழ்க்கையும் கொடுத்து, வளரவும் வழி செய்தது. எகிப்தில் தஞ்சமான சதாம் ஹுஸைனுக்கு அமெரிக்க உளவுப்பிரிவான சி.ஐ.ஏ. கை கொடுத்தது.

காரணம் ஈராக்கில் உள்ள காசிம் ஆட்சியை அப்புறப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அமெரிக்காவுக்கு! அதன் படியே பாத் கட்சியின் ஆட்சி மலர்ந்தது. அகமது பக்கீர் என்பவர் அதிபரானார். ஊரை விட்டே ஓடிப் போன சதாம் ஹுஸைன் விவசாயத்துறை மந்திரியானார். சதாம் ஹுஸைனால் எதையும் செய்ய முடியும் எனற நம்பிக்கை எல்லோரிடமும் உண்டு. எனவே அதிபர் அகமது பக்கீரை விட சதாம் ஹுஸைன் பக்கம் ஆட்கள் அதிகம். நாளடைவில் சதாம் ஹுஸைன் ஆதரவாளர் பெருக... ஒரு நாள் அதிபர் அகமது பக்கீர் கண்விழித்து பார்த்த போது, ஆட்சி சதாம் ஹுஸைன் கையில் இருந்தது. சதிச்செயல்களில் சதாம் மன்னராகத் திகழ்ந்ததாலோ என்னவோ யாரையுமே நம்ப மாட்டார்.

அதன் படியேதான் ராணுவத்தைக் கூட நம்பாமல் தனது பாதுகாப்புக்கு தனிப்படை ஒன்றை அமைத்தார். அதில் உறவினர்களுக்கே முக்கிய இடம் கொடுத்தார். யார் வேண்டுமானாலும் தனக்கு எதிரியாக மாறுவார்கள் என்ற எண்ணம் சதாம் ஹுஸைனுக்கு எப்போதுமே உண்டு. ஒரு நாளில் 18 மணி நேரம் கண் விழித்து இருப்பார். அவர் செயலாற்றும் திட்டங்கள் அனைத்துமே வியப்புக்குரியதாக இருக்கும். ஒரு உளவாளியை நியமித்து இருந்தால் அந்த உளவாளியை பற்றி அறிய இன்னொரு உளவாளி இருப்பார். இதனாலேயே எல்லோருக்கும் சதாம் என்றால் ஏக பயம்! பக்தாத் நகரில் சதாம் ஹுஸைனுக்கு பல அரண் மனைகள் உண்டு. எந்த அரண்மனையில் சதாம் எப்போது இருப்பார் என்பது யாருக்கும் தெரியாது. ஒரு நாள் தூங்கிய அரண் மனையில் சதாம் இன்னொரு நாள் தூங்கமாட்டார். அவருக்குரிய சாப்பாடு பல அரண்மனைகளில் தயாராகும்.

அவர் ஏதாவது ஓர் அரண்மனைக்கு திடீர் என்று வந்து சாப்பிடுவார். சதாம் ஹுஸைனின் தொப்பியில் இருந்து, ஷூ வரை குண்டு துளைக்காத ஆடைகள் தாம்! சில சமயங்களில் நெருங்கிய சிலர் கேட்பார்கள். 'சதாம் சேர்! ரொம்பவும் தான் நீங்க பாதுகாப்பா இருக்கீங்க!' என்பார்கள். அதற்கு சதாம் சிரித்துக் கொண்டே சொல்வாராம்! காலம் முன்பு போல் இல்லை. எவனாவது வெடிகுண்டை வாயில் போட்டு விழுங்கி விட்டு, வந்து கூட என்னை தாக்குவான். நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பாராம்! சதாம் ஹுஸைனுக்கு 3 மகள்கள், 3 மகன்கள். இவர்களில் இரண்டு மகன்கள் மற்றும் தனது செயலாளர் ஒருவருக்கு மட்டுமே சதாம் தனது ரகசியங்கள் எதுவாக இருந்தாலும் தெரிவிப்பார். சதாம் ஹுஸைனுக்கு 1963ஆம் ஆண்டு திருமணம் நடந்தது.

மனைவி பெயர் சாஜிதா கைரல்லா தெல்பா. இந்த தம்பதியருக்கு 2 மகள்கள், 3 மகன்கள் உள்ளனர் மகள்கள் ரகத் ஹுஸைன், ராணா ஹுஸைன், மகன்கள் உதேய் சதாம் ஹுஸைன், குவாசி சதாம் ஹுஸைன், அலி சதாம் ஹுஸைன். இவர்களில் அலி சதாம் ஹுஸைனுக்கு இப்போது 18 வயதாகிறது. அவரை சதாம் எங்கேயோ ரகசியமாக வைத்து வளர்த்து வருகிறார். மற்ற 2 மகன்களையும் ஆரம்ப கால கட்டத்தில் இருந்தே தன்னைப் போலவே இருக்கும்படியாக வளர்த்திருக்கிறார். சிறுவயதிலேயே மகன்கள் இருவரையும் சிறைச் சாலைக்கு அழைத்துச் சென்று அங்கு கைதிகளுக்கு தரப்படும் தண்டனைகளை பார்த்து, ரசிக்கச் சொல்வாராம். இப்போது 39 வயதாகும் மூத்தமகன் உதேய் அப்பா வைப்போலவே பயங்கரமான முரட்டுத் தனம். சதாம் ஹுஸைன் இவரிடம் சில வேலைகளை வாங்கினாலும், முழு நம்பிக்கை வைத்திருக்கமாட்டார். காரணம் ஒரு சின்ன பிளாஷ் பேக். உதேய்க்கு பொழுதுபோக்கே நன்றாகக் குடிப்பது, அழகான பெண்களை தள்ளிக் கொண்டு போவது, நண்பர்களுடன் சேர்ந்து ரகளை செய்வது போன்றவைகள் தாம்! உதேய் குடித்தால் மற்றவர்கள் உயிரைத்தான் கையில் பிடித்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக ஒன்று, இசைக்கச்சேரி மையத்திற்கு நண்பர்களுடன் செல்வார் உதேய். தனக்கு இஷ்டமான பாட்டுக்களை பாடச் சொல்லி படு ஜாலியாக ஆடுவார். இடையில் திடும் என்று துப்பாக்கியை எடுத்து ஏதாவது ஒரு பகுதியைப் பார்த்து பட... பட... வென்று சுடுவார்.

அப்போது யாரும் பயந்து விடக்கூடாது. பயத்தில் பாட்டை நிறுத்தி விடக் கூடாது. இது தான் உதேய்க்கு அதிகம் பிடித்த விளையாட்டு. இப்படிப்பட்ட உதேய் ஒரு முறை சதாம் ஹுஸைனின் மெய்க்காவலர் ஒருவரையே சுட்டுக் கொன்றுவிட்டார். அப்போதிருந்தே உதேய் என்றால் சதாமுக்கு கடுப்பு தான் வரும். 1996ல் உதேய்யை யாரோ சிலர் கொலை செய்ய முயற்சி செய்ததும், அதில் உதேய் உயிர் தப்பினாலும், 2 கால்களின் செயற்பாட்டை இழந்ததும் ஏன் என்பது இதுவரை வெளியே தெரியாத மர்ம முடிச்சுகள். இப்போது உதேய் பழைய மாதிரி இல்லை. ஒரு பத்திரிகை நடத்திக் கொண்டிருக்கிறார். ஒரு டி.வி. நிறுவனமும் அவரிடம் இருக்கிறது. பாத் கட்சியின் கொள்கை பரப்பும் முக்கிய பொறுப்பும், ரகசிய உளவு வேலைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். சதாம் ஹுஸைன் தனது உயிரைப் போல நம்புவது 37 வயதான குவாசி ஹுஸைனைத் தான்! ஈராக்கை சதாம் ஹுஸைன் பாதுகாக்கிறார் என்றால் சதாம் ஹுஸைனை பாதுகாப்பது இந்த குவாசிதான்.

'எனக்குப் பிறகு குவாசி தான் ஆட்சிக்கு வருவான்' என்று நெருங்கிய பலரிடம் சதாம் அவ்வப்போது சொல்லியிருக்கிறார். சதாம் ஹுஸைனை விடவும் யானை பலம் குவாசி ஹுஸைனிடம் உண்டு. ஆனால் அதிகம் மௌனம் தான் காப்பார். குவாசிக்குள் இருக்கும் உணர்வுகள், விஷயங்கள் எதுவும் வெளியே தெரியாது. ஈராக்கின் உளவுப் பிரிவும், பாதுகாப்பு படைகளும் குவாசி ஹுஸைனின் கட்டுப்பாட்டில் தான் இயங்குகிறது என்பதன் மூலம் அவரது முக்கியத்துவம் நமக்கு தெரிந்து விடும். குவாசியைப் போலத்தான் சதாம் ஹுஸைன் தனது மருமகன்களிடமும் அதிக நம்பிக்கை, பாசம் வைத்திருந்தார். மகள் ரகத் ஹுஸைனின் கணவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பாலைவன அரணை நம்பும் சதாம் போர் நீடிப்பதையே விரும்புவார்!

ஈராக் போர் காட்சிகளை, குறிப்பாக பக்தாத் நகரை நோக்கி அமெரிக்க இராணுவ டாங்கிகளும் துருப்புக்கள் அடங்கிய இதர வாகனங்களும் செல்வதைப் பலரும் தொலைக்காட்சியில் பார்த்திருக்கலாம்.

இக்காட்சிகளைக் கூர்ந்து கவனித்திருந்தால் இராணுவ டாங்கிகள் வரிசையாகச் சென்ற பாதைக்கு இரு புறங்களிலும் ஒரே மணலாக இருந்ததைப் பார்த்திருக்கலாம். சிலருக்கு ஈராக் என்பதே வெறும் பாலைவன நாடோ என்றும் தோன்றியிருக்கலாம். அவர்களது ஊகம் ஓரளவு சரியானதே.

ஈராக்கின் தென்பாதி வெறும் பாலைவனமே. வடபாதி செழிப்பானது. ஈராக்கின் இந்த வடக்குப் பகுதியில் இரு பெரிய நதிகள் ஓடுகின்றன. ஈராக நாட்டின் முக்கிய நகரங்களெல்லாம் வடக்குப் பகுதியில்தான் உள்ளன.

பாலைவனமாக உள்ள தென் பகுதியில் செடி, கொடிகளைக் காண்பது அபூர்வம். எங்கு பார்த்தாலும் மணல். கண்ணுக்கெட்டும் தூரம் வரை ஒரே சமதரை. தொலைவில் எதிரி என்று சொல்லத்தக்க ஒருவர் நின்றால் அவரைச் சுட்டு வீழ்த்துவது எளிது. அவர் ஓடி ஒளிய மரமோ, பள்ளமோ, மேடோ கிடையாது. ஆனால், இப்பாலைவனப்பகுதி ஒரு வகையில் ஈராக்குக்கு அரண் போல விளங்குகிறது.

விரைவில் பக்தாத்தை எட்டி சதாம் ஹுஸைனை வீழ்த்தவேண்டும் என்ற நோக்கில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் சுற்றி வளைத்துக் கொண்டு இப்பாலைவனப்பகுதி வழியே செல்வதையே தேர்ந்தெடுத்தன.

எறும்புகள் ஊர்ந்து செல்வதுபோல அணி அணியாகச் செல்கிற அமெரிக்க இராணுவ டாங்கிகளையும், இதர வாகனங்களையும் வானிலிருந்து தாக்க ஈராக்கிடம் தகுந்த வான்படையும் இல்லை, தகுந்த ஏவுகணைகளும் இல்லை என்பது அமெரிக்கர்களுக்கு நன்கு தெரியும்.

குவைத்தின் மேற்குப் பகுதியிலிருந்து ஈராக்கில் நுழைந்த அமெரிக்கப் படையினர் பலநூறு கிலோ மீற்றர் தூரம் பெரிய எதிர்ப்பு இன்றி முன்னேறினர் என்பது உண்மையே. ஆனாலும், இந்த முன்னேற்றம் எளிதாக இருக்கவில்லை.

பாலைவனப் பகுதியில் சாதாரண நாள்களிலேயே நல்ல எதிர்க்காற்று. அதில் புழுதியும் இருக்கும். முடிந்த மட்டில் விரைவாக பக்தாத்தை அடைய வேண்டும் என்பதால் வழியில் முகாமிட்டு ஓய்வெடுக்க வாய்ப்புக் கிடையாது. இரவில் ஓய்வெடுக்க எங்காவது வழியில் வாகனங்களை நிறுத்தினால் படுத்து உறங்க மணலில் பள்ளம் தோண்ட வேண்டும். அந்த பள்ளத்துக்குள்தான் உறங்க வேண்டும். சூரியன் மறைவதற்குள் சாப்பாடு. இரவில் துளி வெளிச்சம் வரக்கூடாது. உறங்கும் போதும் முகமூடி அணிந்திருக்கவேண்டும். எனக் கட்டுப்பாடு. ஈராக் ஒருவேளை விஷவாயுக் குண்டுகளை வீசினால் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக இந்த முகமூடி.

அதிகாலை எழுந்து எல்லாவற்றையும் முடித்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி 'கழிப்பறை' பிரச்சினை இல்லாத வகையில் 'ரெடிமெட்' உணவு. மறுபடி வாகனங்களில் ஏறிக்கொண்டு பயணம். அமெரிக்க வீரர்கள் குளித்து ஒரு வாரம் ஆகியிருக்கலாம் என்று சில தகவல்கள் கூறுகின்றன.

பாலைவனம் என்பதால் காற்றில் எப்போதும் நுண்ணிய மணல். சட்டைக்குள், உள்ளாடைகளுக்குள் நைசான மணல். நாசித் துவாரங்களிலும் நுண்ணிய தூசு.

**என்.ராமதுரை**

இப்படியான பல கஷ்டங்களுக்கு இடையேதான் அமெரிக்கத் துருப்புகள பக்தாத்தை நோக்கி முன்னேறுகின்றன.

இருக்கிற பிரச்சினை போதாது என இந்த வார முற்பகுதியில் பாலைவனப் பகுதியில் தொடர்ந்து சில நாள்களுக்கு கடும் புழுதிப்புயல் வீசியது. இந்த புழுதிப் புயலின் போது படைகளின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டது. சாலையில் சில அடிக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதே தெரியாத அளவுக்கு எங்கு நோக்கினும் புழுதி. வாகனங்கள் மிக மெதுவாக ஊர்ந்தன. பார்வை மறைக்கப்பட்டதால் சில இடங்களில் முன்னே செல்லும் வாகனங்கள் மீது மோதுகிற சிறு விபத்துகளும் ஏற்பட்டன. வேறுசில இடங்களில் அமெரிக்க வீரர்கள் வாகனங்களை நிறுத்திவிட்டு உள்ளே பதுங்கினர். உள்ளேயே சாப்பாடு. சிலர் வாகனங்களுக்குப் பின்னால் பதுங்கினர். பக்தாத் நகரிலும் இந்தப் புழுதிப்புயல் வீச, அங்கு பகல், இரவாகியது. ஈராக்கில், குறிப்பாகத் தென்பகுதியில் இப்படி அடிக்கடி புழுதிப்புயல் வீசுவது உண்டு. சில சமயம் இது தொடர்ந்து 5நாள்கள் வரை நீடிப்பது உண்டு.

புழுதிப் புயல் வீசும்போது அந்தப் புழுதி மண்டலம் வானில் 18ஆயிரம் அடி வரை வியாபிக்கும். ஆகவே, இராணுவ ஹெலிகொப்டர்கள் இயங்க முடியாது. வேவு பார்க்கிற ஆளில்லா விமானங்களைச் செலுத்த முடியாது. நுண்ணிய தூசு வாகனங்களின் இயர் திரத்துக்குள்ளும் புகும். மணிக்கு 80கி.மீற்றர் வேகத்தில் வீசுகிற இந்தப் புழுதிப்புயல் ஓய்ந்ததும் சிலசமயங்களில் மழைபெய்யும். அப்போது நுண்ணிய புழுதி கலந்த மழை நீர் எல்லா வகையான கருவிகளையும் பாதிக்கும்.

இப்படியான நிலைமைளை எதிர்பார்த்து அமெரிக்கப் படையினருக்கு முன்கூட்டியே சவுதி அரேபியப் பாலைவனத்திலும், அமெரிக்காவின் நெவாடா பாலைவனத்திலும் பயிற்சி அளிக்கப்பட்டது. வாகனங்களின் இயந்திரங்களுக்கு கூடுதல் 'பில்டர்' பொருத்தப்பட்டன. வாகனங்கள் பழுதடையாமல் இருக்க தனி பராமரிப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருந்தன.

ஆனாலும், பயிற்சிகள் வேறு; நிஜமான போர் நிலைமைகள் வேறு. அமெரிக்கத் துருப்புக்கள் எதிர்பார்த்த அளவுக்கு வேகமாக முன்னேறவில்லை என்று அமெரிக்க வட்டாரங்களில் கருதப்படுகிறது. பாலைவன நிலைமைகளே இதற்குக் காரணம்.

1991ஆம் ஆண்டில் நடந்த வளைகுடாப் போரானது ஜனவரி,பெப்ரவரி மாதங்களில் நடந்தது. அப்போது சுட்டெரிக்கும் வெயில் கிடையாது. இப்போது ஈராக்கின் தென்பகுதியில் வெயிலின் கடுமை அதிகரித்து வருகிறது. இப்போரானது ஏப்ரல் வரை நீடித்தால் பாலைவனத்தில் சில பகுதிகளில் வெயில் 117 பாகை பரனைட் வரை செல்லும். ஜூலையில் இது 123 பாகை உயரும். போரானது மேலும் பல வார காலம் அல்லது சிலமாத காலம் நீடிப்பதை சதாம் ஹுஸைன் விரும்புவார். பாலைவனத்தில் வெயில் கொதிக்க ஆரம்பிக்கும் போது, போர் நிறுத்தம்கோரி அமெரிக்காவில் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் சூடேறும். அவரைப் பொறுத்தவரையில் போர் நீடிப்பு நல்லதுதானே.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி
புவனேஸ்வரி பஞ்சாட்சரமூர்த்தி
அவர்களின் அன்புக் கணவர்

### மா.பஞ்சாட்சரமூர்த்தி

அவர்கள் இறைபதம் அடைந்த 31ஆம் நாளில் அவரது ஆத்மா சாந்தியடையவும், அன்னாரது குடும்பத்தார் ஆறுதல் அடையவும் பிரார்த்திக்கும்...

யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை, புலோலி. (16161) அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னையின் மடியில்
16 - 01 - 1962



ஆண்டவனின் அடியில்
01 - 03 - 2003

### அமரர் மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி

(ஆசிரியர் - வடஇந்து மகளிர் கல்லூரி)

எம் குடும்ப ஒளிவிளக்கே!
எமை மறந்து போனதேனோ?
தெய்வமே! நீர் பெற்ற பிள்ளைகள் - இங்கு
கதறி அழுவதைக் கண்டிட வாரீர்!

இன்று (31.03.2003) திங்கட்கிழமை நடைபெறுகின்ற அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தவறாது கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"மகேஸ் இல்லம்"*
*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி*

(16162)

பிரிவால் துயருறும்:
மனைவி,
பிள்ளைகள்.

## சதாமுக்கு...

(11ஆம் பக்கத் தொடர்சி)

ஹுசைன் கமால் அல் மஜீத். மற்றொரு மகள் ராணா ஹுசைனின் கணவர் சதாம் கமால் அல் மஜீத். இந்த 2 மருமகன்களும் 1995இல் திடீர் என குடும்பத்துடன் ஜோர்டானுக்கு சென்று தஞ்சமடைந்து விட்டனர். அது மட்டுமல்ல! ஈராக்கின் ஆயுத விவரங்கள், சதாம் ஹுசைனின் ரகசியத் திட்டங்கள் பற்றி அங்கிருந்தபடியே ஐ.நா.சபை மற்றும் அமெரிக்க தூத ரகங்களுக்கு தர ஆரம்பித்து விட்டனர். அப்போது சதாம் ஹுசைன் அடைந்த கோபத்திற்கு அளவே இல்லை.

ஆனால், எதையும் வெளிக் காட்டாமல் அமைதியாக இருந்தார் மனிதர். சரியாக ஒரு வருடம் கழிந்தது. எது நடந்தாலும் நீங்கள் என் மருமகன்கள் தானே! வாருங்கள். நடந்ததை மறப்போம். நடப்பதை நினைப்போம் என்று அழைத்தார். மாமனாரின் அழைப்பை ஏற்று 1996இல் 2 மருமகன்களும் ஜோர்டானில் இருந்து குடும்பத்தோடு ஈராக் வர... எல்லையிலேயே அனைவரையும் கைது செய்து, சிறையில் அடைக்க உத்தரவிட்டிருந்தார் சதாம் ஹுசைன். அதன்படி அனைவரும் கைதாகி விட, அலி கமால் உட்பட 3 பேரன்களை மட்டும் தன்னோடு வைத்துக் கொண்டார் சதாம். சரியாக 3ஆவது நாளில் இரண்டு மருமகன்களும் பாக்தாத் நகருக்கு வெளியே பிணமாகக் கிடந்து, கண்டு பிடிக்கப்பட்டனர். சதாம் ஹுசைனின் 2 மகள்களும் இதோ... இன்னமும் சிறையில்தான் இருக்கிறார்கள். அந்தச் சிறைச்சாலையின் சாவி வேறு யாரிடமும் இல்லை. சதாம் ஹுசைனின் பொக்கெட்டுகளில்!

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி மயில்வாகனம்

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி மயில்வாகனம் சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - செல்லாச்சிப்பிள்ளையின் மூத்த மகளும் மயில்வாகனம் (ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர் (ப.நோ.கூ.சங்கம், கைதடி) அவர்களின் மனைவியும் கோபிராஜ் (சுவிஸ்), தாரணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவனேஸ்வரியின் (ஆசிரியை, யா/நாவற்குழி மகா வித்தியாலயம்) அன்பு மாமியும் கனகராஜா (கொழும்பு), பாலசுப்பிரமணியம், தேவராஜா (கனடா), மகேஸ்வரி, நடராஜா (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரியும் நாகலட்சுமி, இந்திரா (கனடா) பாசமிகு மாமியும் கமலாதேவி, சாரதா, தியாகராஜா, சத்தியபாமா ஆகியோரின் மைத்துனியும் சாந்தீபன், குமாரதீபன் பாலதீபன் ஆகியோரின் பெரியதாயாரும் மங்களேஸ்வரன், குகதர்சினி, கௌரிகரன் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2003) திங்கள் பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி தெற்கு,*
*கைதடி.*

(16165)

தகவல்:
சு.மயில்வாகனம்
(கணவர்)

### திருமதி
### பொன்னுத்துரை இரத்தினம்மா

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை இரத்தினம்மா நேற்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் சின்னத்தம்பி பொன்னுத்துரை (முன்னாள் அரசாங்க ஒப்பந்தகாரர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லக்கண்டு மனோன்மணி மற்றும் திருமதி கனகசபை இராசலட்சுமி, திருமதி யோகேந்திரன் அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகந்தா, சிறினிவாசன் (லண்டன்), ரவிதாஸ் (திட்டமிடல் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), குமாரதாஸ் (ஆஸ்திரேலியா), சிவதாஸ் (ஆஸ்திரேலியா), மோகன்தாஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிறினிவாசன் (லண்டன்), கோமதி, யமுனா (ஆஸ்திரேலியா), சாமினி (ஆஸ்திரேலியா), சுதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபாஸ், சுகன், பிரமோத் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), நிறுத்தியா (வேம்படி மகளிர் கல்லூரி), கோகுலன், சிந்து, சகானா, அனித்தா, மிதுன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2003) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொ.ரவிதாஸ் (மகன்),*
*93, சம்பியன் லேன்,*
*கொக்குவில்.*

(16164)

தகவல்:
யோ.தர்மேந்திரா
(பேறாமகன்)
(மருத்துவபீடம்)


# சுடர் ஒளி

06.04.2003 இதழில்

விலை 14/=




- சும்மா கிடக்கும் காணிகளில் படைமுகாம்களை நிறுவும் திட்டம். - குடாநாட்டில் எதிர்ப்பு வலுக்கிறது - (வடபுலம்)
- பாலாவின் வன்னிப் பயணமும் படையணியின் ஊடுருவலும்.
- நடுநிலை கூறும் தரப்புக்கள் கடுகளவும் பேணாத அவலம். - (தேரடி)
- வைகோ விடுதலைக்கு தமிழகத்தில் பலமான தளம்.
- ஈராக்கில் இரத்தவெறி பிடித்த போர்.
- யார் இந்த சதாம்? - (தொடர்)
- மட்டக்களப்பில் மீண்டும் யுத்தகாலக் கெடுபிடிகள்.
- வாளாவிருந்த ஆனந்தசங்கரியின் தேளாகக் கொட்டும் கருத்துக்கள்.
- ஐயோ! என்ரை.... - (நகைச்சுவை)

மற்றும் சிறுகதை, மசாலா மிக்ஸ், க்ரைம் டயறி, கவிதைப் புனல், இணையத்தளங்களிலிருந்து, சினிமா, இளஞ்சுடர் உட்பட பல்வேறு சுவையான அம்சங்கள்.

(C/27063)

# ..ழக மேம்பாட்டுப் போராட்டத்தில் ..ண்களைப் பங்குபற்றச் செய்தல்

## ..சிய பெண்கள் எழுச்சி மாநாட்டில் தீர்மானம்

மட்டக்களப்பு,மார்ச்31

..பகத்தின் ஒவ்வொரு கிராமங் ..ும் பொன்கொழிக்கும் பூமி .. மாற்றும் சமூக மேம்பாட்டுப் ..ராட்டத்தில் பெண்களைப் பங்கு ..றச் செய்வதாக மட்டு. தேசிய பெண் .. எழுச்சி மாநாட்டில் தீர்மானம் ..வேற்றப்பட்டிருக்கிறது.

..டந்த 27ஆம் திகதி மட்டக்களப் ..ஆரம்பமான தேசிய பெண்கள் எழுச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வு கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டு. இசை, நடனக் கல்லூரியில் நடைபெற்றன.

புலிகளின் மகளிர் அரசியல்துறைப பொறுப்பாளர் பானுகா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டு.அம்பாறை விசேட தளபதி ரமேஸ், அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இறுதிநாள் நிகழ்வில் ஐந்து தீர் மானங்கள் எடுக்கப்பட்டன.

★ காலங்காலமாக சமூகப் பிற் போக்குத்தனங்களில் கட்டுண்டு போயுள்ள பெண்களை அத்தளை களிலிருந்து விடுத்து விளிப்புணர்வு கொண்ட பெண்களாக மாற்றவேண் டும்.

★ ஒவ்வொரு பெண்களினதும் தனித்துவமான ஆற்றல்களை இனங் கண்டு அவர்களை அத்துறையில் உச்ச நிலையை அடைய வழிசெய் தல்.

★ தாயகத்தின் ஒவ்வொரு கிரா மங்களையும் பொன்கொழிக்கும் பூமியாக மாற்றும் சமூக மேம்பாட்டுப் போராட்டத்தில் பெண்களும் பங்கு கொள்ளல்.

★ பெண்களின் பாதுகாப்பு, சுய கௌரவம் ஆகியவற்றை பெண்களே தீர்மானித்துக்கொள்ளும் வகையில் அவர்களை உடல், உள ரீதியாக வலுப்பெறச் செய்தல்.

★ பெண்களின் அபிலாஷைகளை நிதர்சனமாக்கும் வகையில் பெண் களை எழுச்சிகொண்ட பெண்களாக மாற்றல்.

இவையே இறுதிநாள் பெண்கள் எழுச்சி நிகழ்வில் எடுக்கப்பட்ட தீர் மானங்கள் ஆகும்.

அன்று மாலை மட்டு. கரடிய னாறு தேனகை மைதானத்தில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (ஐ-9)


உ
சிவமயம்

**ஸ்ரீ பரமானந்தா**

**..றுவர், முதியோர் இல்ல ஆச்சிரமம்**

**வதிரி - கரவெட்டி**

**பதவி வெற்றிடம்**

..பெண் மேற்பார்வையாளர்

..தகைமை 1) ஜி.சீ.ஈ. (சா/த) வர்த்தகம் அல்லது அதற்கு மேலும் கணக்கியல் பாடம் உட்பட 6 பாடங்களில் சித்தி.

2) அ) (ஆங்கிலம்/தமிழ்) தட்டச்சுவேலை } மேலதிக
ஆ) ஆங்கில அறிவு } தகைமை

..வயதெல்லை : 30 - 50 வருடங்கள்.

..) சமையல் வேலை செய்வதற்கு (ஆண்/பெண்)

(பணிபுரிந்து அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது)

வயதெல்லை : 40 - 50 வருடங்கள்.

..றிப்பு : இருப்பிட, உணவு வசதிகள் உண்டு. தொண்டூதியம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரர் சுய விவரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

..டிவு திகதி : 12.04.2003

..றிவித்தல்:

முதியோர்களை அனுமதித்தல்

இல்ல ஆச்சிரமத்தில், முதியோர் பராமரிப்பு இல்லத்தில் சேரவிரும்பும் ஆண், பெண் இருபாலாரும் உடனடியாக எம்முடன் தபால் மூலமாகவோ நேரிலோ தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

பணம் செலுத்தித் தங்குவதற்கு ஏற்ற இருப்பிட வசதி உண்டு. அவர்களும் தங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும்.

தொலைபேசி இல. 021-2263136

வதிரி,
கரவெட்டி. 29.03.2003

மா.சிவசண்முகம்
செயலாளர்.

ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம், தர்மகர்த்தாக்கள் சபை. (சி-27064)


# வீதியை கடந்து ஓடிய சிறுமி தட்டி வான் மோதி மரணம்!

## வரணி கறுக்காயில் சம்பவம்

வரணி,மார்ச்31

வீதியைக் கடக்க முயன்ற சிறுமி தட்டிவான் ஒன்றினால் மோதுண்டு பலி யானார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை வரணி, கறுக்காயில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த செல் லத்துறை விஜயலலிதா (வயது 13) என்னும் பாடசாலை மாணவியே மரண மானவராவார்.

பயணிகள் சேவையில் ஈடுபடும் இவ்வாகனம் பருத்தித்துறை கொடி காமம் பிரதான வீதியில் சேவையில் ஈடுபட்டிருந்தது. அருகில் உள்ள காளி கோவிலில் நடந்த பூசையில் கலந்து கொள்ள சிறுமி வேகமாக வீதியைக் கடந்து ஓடியவேளை வாகனம் மோதி யது என்று கூறப்படுகிறது. படுகாய மடைந்த சிறுமி உடனடியாக பருத் தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார் எனினும், வழியில் அவர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

விபத்தில் உயிரிழந்த சிறுமியின் சகோதரன் ஒருவர் மிருசுவிலில் மனிதப் படுகொலையில் கொல்லப்பட்டவராவார். இவ்வழக்கு தற்சமயம், கொழும்பில் நடைபெறுகிறது. அதற்காக தந்தை யார் கொழும்பு சென்றுள்ளார்.

(ஐ-170-117)

# கோம்பயன் மணல் மயானப் பகுதியில் கழிவுப் பொருள்களால் சீர்கேடு

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ். மானிப்பாய் வீதியில்,கோம் பையன் மணல் மயானத்துக்கு அரு கில் வீதியோரமாகக் கொட்டப்படும் கழிவுகளால் அப்பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடு,கோழி ஆகியவற்றின் எலும்பு கள்,தோல் மற்றும் கழிவுகளே இப் பகுதியில் கொட்டப்படுகின்றன.

இதனால், இப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இந்த வீதியூடாகச் செல் லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மூக்கைப் பொத்திப் பிடித்தவாறு பயணஞ்செய்ய வேண் டியுள்ளது.

இதற்கிடையில் - இப்பகுதியில் அநாதரவாக விடப்படும் நாய்கள், பூனைகள் மற்றும் அவற்றின் குட்டிகள் வீதியில் பயணஞ்செய்யும் வாகனங்களில் மோதி உயிரிழக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இவ்வாறு உயிர் இழக்கும் நாய்கள், பூனைகள் என்பனவும் அங்கிருந்து அகற்றப்படாமல் வீதியோரங்களி லேயே விடப்படுகின்றன. இதனாலும் அங்கு துர்நாற்றம் வீசுகின்றது.

இப்பகுதியில் குப்பை கூளங்களை அகற்றும்பணி கடந்த பல மாதங்களாக நடைபெறவில்லை என்றும் - சுட்டிக் காட்டப்பட்டது.

(ஐ-12)

# 'ஷொப்பிங்' பைகளில் கசிப்பு கடத்தும் முயற்சி முறியடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்31

'ஷொப்பிங்' பைகளில் வைத்துக் கடத்தப்பட்ட 20 லீற்றருக்கும் அதிக மான கசிப்பு, பொதுமக்களால் பறி முதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டி ருக்கிறது.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் அத்தியடிப் பகுதியில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவ தாவது:-

இருவர் சைக்கிள்களில் பயணப்பை களிலும், உரப்பைகளிலும் பொருள் களைக் கட்டி எடுத்துக்கொண்டு வரு வதுபோல் வீதியால் சென்று கொண் டிருந்தனர். இவர்களின் நடவடிக்கை யில் சந்தேகங்கொண்ட பொதுமகன் ஒருவர் இவர்களைப் பின்தொடர்ந்தார். இதனை அவதானித்த இருவரும் வெவ்வேறு திசைகளில் சென்று தலை மறைவாக முயன்றனர். அத்தியடிப் பக்கமாக ஒருவரும், நல்லூர்ப் பகுதி நோக்கி இன்னொருவரும் சென்ற வேளையில் அத்தியடிப் பக்கஞ்சென்ற வரைப் பின்தொடர்ந்து சென்ற பொது மகன் வேறு சிலரின் உதவியுடன் அவரை மடக்கிப்பிடிக்க முற்பட்டபோது சைக்கிளையும் பிரயாணப் பையை யும் போட்டுவிட்டு அவர் தப்பி ஓடி மறைந்துவிட்டார்.

அவர் கைவிட்டுச்சென்ற பிரயாணப் பையைப் பிரித்துப் பார்த்தபோது அதனுள் ஷொப்பிங் பைகளில் இறுகக் கட்டப்பட்ட நிலையில் நிரையாக அடுக்கப்பட்டு 20 லீற்றருக்கும் அதிக மான கசிப்பு காணப்பட்டது. பின்னர் பொதுமக்கள் கூடி கசிப்பை அழித்த னர். இச்சம்பவம் பற்றி பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

கசிப்புக் கொண்டுசென்றவர் கை விட்டு ஓடிய சைக்கிள் யாழ். நல்லூர் அரசியல் துறையினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. (ஐ-12)


ஆறாம் ஆண்டு நினைவுகளில்



செல்வி
ஐயாத்துரை செல்வறஞ்சினி

தோற்றம் 01.10.1980
மறைவு 31.03.1997

எப்போதும்
உன் நினைவுகளுடன்

உரும்பிராய்
வடக்கு (16172)

தாய், தந்தை,
சகோதரர்கள்.



கண்ணீர் அஞ்சலி

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்பீட நான்காம் வருட மாணவன் மகேஸ்வரனின் அன்புத் தந்தை

தோற்றம் 10 - 09 - 1933



மறைவு 30 - 03 - 2003

சிதம்பரப்பிள்ளை முருகேசபிள்ளை

(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் பருத்தித்துறை, கோப்பாய்)

பண்பின் திருவுருவே பாசத்தின் பெருவடிவே!
கண்ணான நண்பனவன் உயிர்த்துடிப்பே!
கருத்தே சேவையாய்த் திகழ்ந்த கலங்கரைத் தீபமே!
வைகறைப் போதில் இறையடி நாடினும்
வையக மீதிலெம் நினைவிலே வாழ்வீர்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அன்னாரின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு அனுதா பத்தைத் தெரிவிப்பதுடன், எம் கண்ணீர்ப் பூக்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

நான்காம் வருட மாணவ நண்பர்கள்,
பேராதனைப் பல்கலைக் கழகம், பேராதனை.

(16171)



லக்ஷ்மி இணுவில்
பார்த்திபன், திவ்வியா உன்னி, ரஞ்சித், வடிவேலு நடித்த
சபாஷ் (ரீலஸ்)
தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
விஜய், ரீமாசென், வடிவேல்
பகவதி
10.30, 2.30, 6.30 மட்டும்

நிறைஞ்சனாஸ்
சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த
மாயி
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணி
HOLLOW MAN

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
விஜய், சினேகா, ரகுவரன் நடித்த
வசீகரா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நேரம்)
இரவு 7.00 மணி காட்சியாக
RUSH HOUR (16139)


# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை முருகேசபிள்ளை

**J.P.,B.A (Lond.)**

*(ஓய்வுபெற்ற பிரதேச செயலர் - A.G.A.)*

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை முருகேச பிள்ளை நேற்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் சிதம்பரப்பிள்ளை - இலட்சுமிப் பிள்ளை அவர்களின் கனிஷ்ட புத்திரனும் லீலாவதியின் அன்புக் கணவரும் உஷா (ஆசிரியை, யா/தும்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை), மஹேஸ்வரன் (பொறியியற்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), ராதை (முகாமைத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற அதிபர் க.சிவப்பிரகாசம் - நல்லம்மா அவர்களின் மருமகனும் காலஞ்சென்ற ஈஸ்வரம்மா, தபாலதிபா சச்சிதானந்தம் மற்றும் சி.வல்லிபுரம் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்) அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பருத்தித்துறை கோரியடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வடலிப்பாதி,*
*தும்பளை, பருத்தித்துறை.* (C-27065)

தகவல்,
மனைவி, பிள்ளைகள்.

## சின்னத்தம்பி பொன்னம்பலம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்பலம் 28.03.2003 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் Dr. மயூரநாதன் (லண்டன்), அம்பிகை, பவானி, செந்திநாதன், திருமதி நந்தினி, கிருஸ்ணமூர்த்தி, திருமதி திருஇந்திரகுமாரன் (கனடா), திருமதி பத்மினி விக்னராஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற ராதா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பண்டிதர் சரவணனார், சொக்கலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி விக்னேஸ்வரி இராமச்சந்திரன் (லண்டன்), திருமதி மகேஸ்வரி சிறிஸ்கந்தராஜா (சென்னை), சிறிதரன் (லண்டன்), செல்வி நகுலேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 28-03-2003 வெள்ளிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூங்காவனம்*
*டச்சு வீதி,*
*சண்டிலிப்பாய்.* (16125)

தகவல்:
பொ.செந்திநாதன்.

# புத்தளத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம், மறியல் - பொலீஸார் தடியடி, துப்பாக்கி வேட்டுக்கள்

## நீதியான விசாரணை நடத்தக் கோரிக்கை

புத்தளம்,மார்ச்31

புத்தளம் நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம், கண்டனப் பேரணி, சாலை மறியற்போராட்டம் என்பனவற்றால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. சாலைகளில் ஆங்காங்கே ரயர்கள் எரிக்கப்பட்டன. நகரில் வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை. பஸ் சேவைகள் மாற்றுப்பாதைகளுக்குத் திருப்பிவிடப்பட்டன.

புத்தளம் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வீஇந்திரன், ஓட்டோச் சாரதிகள் சிலரை நையப்புடைத்தார். வதியோர நடைபாதை வியாபாரிகளின் பொருள்களை சேதப்படுத்தினார் எனக்கூறி மக்கள் காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். புத்தளம் தபால் நிலையச் சந்தியில் வைத்து, சாலை மறியற்போராட்டம் நடத்தியோரை பொலீஸார் தடியடிப்பிரயோகம் நடத்திக் கலைத்தனர்; ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர்.

பிற்பகல் 2 மணியளவில் சாலை மறியலில் ஈடுபட்ட புத்தளம் நகரபிதா எச்.எம்.எச்.ஹாஸைன் மற்றும் ஓர் ஆதரவாளரான ஏ.சலாஹுதீன் ஆகியோர் பொலீஸாரினால் தாக்கப்பட்டனர். நகரபிதாவை வீதியில் தள்ளிவிட்டு பொலீஸார் அவர்மீது சப்பாத்துக்களாலும் ஏறிமிதித்தனர்.

காயமடைந்த இருவரும் புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதனையடுத்துப் போராட்டம் உக்கிரமடைந்தது. உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட வேண்டும். நீதியான விசாரணை இடம்பெற வேண்டுமென்று மக்கள் கோசித்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனும் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். பின்னர் தனது புத்தளம் அலுவலகத்தில் சமாச மாநாடொன்றை அவர் நடத்தினார். பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள், நகரசபை உறுப்பினர்கள், ஓட்டோசங்கத் தலைவர்கள், மதப் பெரியார்கள், பொலீஸ் அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

உதவிப் பொலீஸ் அத்தியட்சகரை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு அனைவரும் அங்கு கோரிக்கை விடுத்தனர். நகரபிதா தாக்கப்பட்ட சம்பவம் குறித்து ரிசாத் பதியுதீன் எம்.பி. பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி விளக்கமளித்தார்.

நகரசபைத் தலைவர் நடுவீதியில் பொலீஸாரினால் தாக்கப்பட்டது தண்டிக்கப்பட வேண்டியதாகும். இதற்கான முழுப்பொறுப்பையும் புத்தளம் உதவிப் பொலீஸ் அத்தியட்சகரும், புத்தளம் பொலீஸாருமே ஏற்றுக்கொள்ள வேண்டும். பொலீஸாருக்கென்று கடமைகளும் கட்டுப்பாடுகளும் உள்ளன. மக்களுக்குச் சேவையாற்றவே பொலீஸார் உள்ளனர்.

ஆனால், புத்தளம் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஒரு சர்வாதிகாரியைப் போன்று நடந்துகொண்டுள்ளார். நகரசபைக்குச் சொந்தமான கடைகளை உடைத்துள்ளார். ஓட்டோசாரதிகளை நடுவீதியில் வைத்துத் தாக்கியுள்ளார். சென்ற ஹஜ்ப் பெருநாள் தினத்தன்று மோட்டார்சைக்கிளில் சென்றவர்கள் நடுவீதியில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டனர். உலமாக்கள் கூட அவமதிக்கப்பட்டனர்.

இவரது நடத்தை குறித்து பிரதமர், பொலீஸ்மா அதிபர், உள்துறை அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

## புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் இன்று மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் சமாதானம் மலர்ந் துள்ளது. ஆனால், இந்தச் சமாதான காலத்திலும் நாம் இழப்புகளைச் சந் தித்துள்ளோம்.

கடந்த ஒருவருட காலத்தில் இப் பிரதேசத்தில் அரசு எவ்வித அபிவிருத்திகளையும் ஏற்படுத்தவில்லை. ஈச்சிலம்பற்று வைத்தியசாலைக்கு இதுவரை வைத்தியர்கள் நியமிக்கப்படவில்லை. மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீள்குடியமர முடியவில்லை.

இந்த நிலையில் சமாதானம் நிரந்தரமாக நிலைக்கவேண்டுமானால் நாம் பலமாக இருக்க வேண்டும்.

- இவ்வாறு திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலகமேனும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இசைநிகழ்ச்சியுடன் நடன, நாடகமும் இடம்பெற்றது. போராட்ட வரலாறுகளை சித்தரிப்பதாகவும், இராணுவம் மக்களுக்கு இழைத்த கொடுமைகளை சித்தரிப்பதாகவும் இவை அமைந்திருந்தன. நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (ஐ-9)

---

## ஒறுகொடவத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் பெறமுடியாதுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சம்பவம் நடந்த மர்ம வீட்டிற்கு அருகில் ஆளும் கட்சியின் அரசியல் பிரமுகரின் ஆதரவாளர்கள் பலர் உள்ளனர் என்று இன்னொரு தகவல் தெரிவிக்கப்படுகிறது.

மர்மவீட்டில் நடந்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வாகனச் சாரதி ஒருவர் உட்பட நான்கு பேர் சி.ஐ.டியினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பை அண்டிய பிரதேசத்தில் மேலும் மூன்று வீடுகள் பொலீஸாரால் முற்றுகையிடப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கொட்டாஞ்சேனை, கல்பொத்த வீதியில் வயோதிப மாது ஒருவருடன் வசித்து வந்த 13 வயதுச் சிறுமி பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கிறார்.

---

## பிரதேச சபை உறுப்பினர் கொலை!

பாணந்துறை பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர் இனந்தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை அடித்துக் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரதேச சபையின் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரான பந்து சிறி சொய்சா (வயது 56) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

கொலைக்கான காரணம் பற்றித் தமக்கு எதுவும் தெரியவில்லை என பொலீஸார் தெரிவித்தனர்.

கொலையுண்ட பிரதேச சபை உறுப்பினரின் உடலில் பல காயங்கள் உள்ளதால் இவரது கொலையில் பலர் சம்பந்தப்பட்டுள்ளனர் எனப் பொலீஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி கே.சுப்பிரமணியம் மரணவிசாரணையை மேற்கொண்டார்.

(ஐ)


**NEW SCIENCE CENTRE**

*JAFFNA*

**2004 A/L**

பௌதிகவியல்

By. M.திருமணிநிதி

வெப்பவியல் - (பிரிவு II)

Tue, Thu - 4.00 - 5.00 (p.m)

ஆரம்பம்: 01.04.2003

புலங்கள் - பிரிவு II

Wed, Fri - 6.00 - 7.00 (p.m)

ஆரம்பம்: 02.04.2003

*PAPER CLASS*

Tue, Thu - 6.15 - 7.15

ஆரம்பம்: 01.04.2003

(16121)


# 6,000 குண்டுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்கின்றன.

இதற்கிடையே, ஈராக்கில் போர் முனைகளில் உள்ள அமெரிக்கப் படைகளுக்கான உணவு விநியோகம் பாதிக்கப்படவில்லை என்று அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்கான துணை இயக்குநர் மேஜர் ஜெனரல் ஸ்டான்லி மெக்கிரஸ்டல் தெரிவித்திருக்கிறார்.

ஈராக் மீது இதுவரை 6 ஆயிரம் விமானக்குண்டுகளும் 700 ஏவுகணைகளும் வீசப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், அமெரிக்கப் படையினர் மீது ஈராக்கியர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்துவது குறித்து கவலை தெரிவித்தார். இது பயங்கரவாதச் செயல் என்றும் அவர் எச்சரித்தார்.

ஐ.நாவுக்கான ஈராக்கியத் தூதுவர் இந்தத் தற்கொலைத் தாக்குதலை நியாயப்படுத்தியிருக்கிறார். ஈராக் மககளின் பாதுகாப்புக்காக இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்று அவர் கூறினார்.

நஜாப் நகரம் அருகேயுள்ள ஓர் இராணுவச் சோதனைச் சாவடியில் நேற்றுமுன்தினம் ஈராக் இராணுவ வீரர் ஒருவர் காரில் பொருத்தப்பட்ட குண்டை வெடிக்கவைத்தார்.

ஈராக் போர் ஆரம்பமானது முதல் இதுவரை 32 அமெரிக்க வீரர் கொல்லப்பட்டனர்; 104 பேர் காயமடைந்தனர்; 15 பேர் ஈராக் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டனர். தாக்குதலின்போது 15 பேர் காணாமற் போயுமுள்ளனர்.

கொல்லப்பட்ட பிரிட்டிஷ் படையினரின் எண்ணிக்கை 20, தாக்குதல்களின் போது ஐவர் மட்டுமே கொல்லப்பட்டனர்.

அமெரிக்கப் படையினர் மீதான தற்கொலைத் தாக்குதல் அவ்வாறான தாக்குதல்களின் ஓர் ஆரம்பம் மட்டுமே என்று ஈராக் உப-ஜனாதிபதி தஹா யாசீன் ரமதான் அறிவித்திருக்கிறார். "எதிரியைத் தடுக்கும் அல்லது கொல்லும் எந்த ஒரு முறையையும் பயன்படுத்துவோம். அவர்கள் எதை எம்மிடம் எதிர்பார்க்கிறார்கள்? அவர்கள் வைத்திருப்பதைப் போன்ற ஏவுகணைகளையும் குண்டுகளையும் தயாரிக்க அரபுக்களும் முஸ்லிம்களும் அனுமதிக்கப்படுவதில்லை" - எனவும் அவர் சொன்னார்.

இது இவ்வாறிருக்க, ஈராக் விஷவாயு குண்டுகளை வீசுவதாக செய்திகள் வெளியாகின. அதனால், பீதியடைந்த அமெரிக்க வீரர்கள் முகமூடிகள் அணிந்து போரிட ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். (

---

# புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னேயே சட்டமா அதிபரைத் தொடர்பு கொண்டு புதிய மனுவைத் தாக்கல் செய்யுமாறு கூறியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

'பொடா' சட்டத்தில் தவறு ஏதும் இல்லை, ஆனால், வைகோ மீது அச் சட்டப்படி தமிழக அரசு எடுத்த நடவடிக்கை தேவையற்றது என்று உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது; அது தவறுதலாகப் புரிந்து கொள்ளப்பட்டு விட்டது என்று அதிகாரி விளக்கினார்.

கடந்த ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி வைகோ கைது செய்யப்பட்டார். அது முதல் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். தான் கைது செய்யப்பட்டதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வைகோ மனு தாக்கல் செய்திருக்கிறார். அதில் அரசியல் சட்டத்தின் 19ஆவது பிரிவு வழங்கியுள்ள பேச்சுரிமைக்கு முரணாக, 'பொடா' சட்டத்தின் பிரிவு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மத்தியில் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டரசில் வைகோ தலைமையிலான ம.தி.மு.கவும் இடம்பெற்றிருக்கிறது. வைகோவை விடுதலை செய்ய மத்திய அரசு உதவி செய்யும் என்று எதிர்பார்த்த நிலையில், சனிக்கிழமை அதன் சார்பில் தாக்கலான பிரமாணப் பத்திரம் அரசியல் வட்டாரங்களில் வியப்பை ஏற்படுத்தியது.

*(முன்னர் வந்த செய்தி 3 ஆ பக்கத்தில்)* (ஐ)


# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி செல்லத்துரை

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மகேஸ்வரி செல்லத்துரை அவர்கள் நேற்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் செல்லத்துரையின் அன்பு மனைவியும் குகதாசன், சத்திதாசன், தேஜுயோகன, கமலாம்பிகை, சத்தியபாமா, சாரதா, வசந்தி, பிறேமினி, ஜெயதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராஜநாயகி மற்றும் பாலராசா, தர்மராஜா, ஜெகதீஸ்வரன், சந்திரகுமார், சூரியகுமாரன், இராஜினி, கணேசலிங்கம், புருஷோத்மன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இணுவில் வீதி, மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (31.03.2003) திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் வீதி,*
*மானிப்பாய்.* (16177)

தகவல்:
ஜெயா (மகள்)



MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

# இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 04.04.2003 இற்கு முன்னர் நேரில்

MCS



காரைநகர்

# திருமணற்காடு அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அன்னையின்

## - தேர் உற்சவ சிறப்பிதழ் - (2003-03-31 திங்கட்கிழமை)

## ஈழத்தமிழருக்கு ஆட்சி நலன் சேர்க்க அன்னை தேரேறி வருகிறாள்!



**எழில் பொங்கும் "காரையம்பதியின்" அருள்மிகு தெய்வம்**

காருகும் சோலைகளும் கவினுறும் காட்சிகளும்
"காரையம்பதியாம்" கலைவாழ்வு மலிந்த திருவூரில்
ஆறாகும் பேரழகும் அம்மை சௌந்தராம்பிகையுடன்
"ஆடல் நடம் பயிலும்" சுந்தரேசனின் ஈழத்து சிதம்பரமும்
தேருரும் அகலத் தெருக்களுடன் தேனாறாய் பாயும் கசூரினாவும்
தேவாரத் தமிழ் சைவம் செழித்தோங்கும் தெய்வீகத் தலங்களுடன்
ஆருரின் பெருமைகளை அரவணைக்கும் திருமணற்காட்டில்
"அம்மா" என சொன்னவரை அவனியில் வாழ்விக்கும் தாயின் தேரோட்டம்.

**அகில உலகையும் காக்கும் அன்னை தேரேறி வருகிறாள்!**

உலகத்தின் நாயகியாய் அருள் சொரிய தேரேறி வருகிறாள்
ஊர்கூடி வடம் பிடித்து வாஞ்சையுடன் தொழ தேரேறி வருகிறாள்.
திலகமென விளங்கும் ஈழத்திருப்பதியைக் காக்க தேரேறி வருகிறாள்.
தீர்வு தந்து ஈழத்தமிழினத்தை வாழ்விக்க தேரேறி வருகிறாள்.
நிலவுகின்ற சமாதானத்தை நிலைக்க வைக்க தேரேறி வருகிறாள்.
நிரந்தரமான தாயகத்தில் தமிழராட்சி தருவதற்கு தேரேறி வருகிறாள்.
அழகுக்கு அழகாக சிம்மத்திலமர்ந்து அன்னை தேரேறி வருகிறாள்.
அகில உலகையும் அரவணைத்துக் காக்க தேவி தேரேறி வருகிறாள்.



-கவிமாமணி மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.

தாயின் தேர்விழா சிறக்க அம்பாளின் தாள் பணிந்து தமிழர் வாழ்வில் சாந்த சமாதான வாழ்வு மலரப் பிரார்த்திப்பவர்கள்

| M.G.M. திருமணசேவை | யாழ்.காலணியகம் (பாட்டா ஏஜென்சி) | றூபா பன்முக வர்த்தகம் | மலர் புடைவையகம் |
| --- | --- | --- | --- |
| இல.19, பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். | இல.11, ஆஸ்பத்திரிவீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P: 3152 | 104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | 18, (87A) பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (சி-22049) |


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.